பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 07 புதன்கிழமை (21.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 205

## அல்லைப்பிட்டி படுகொலை தொடர்பான விசாரணை: சட்டமா அதிபரிடம் பாரப்படுத்த நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன்21

அல்லைப்பிட்டிப் படுகொலை தொடர்பான விசாரணைகள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் ரொக்ஸி இதற்கான உத்தரவை நேற்று விடுத்தார்.

அல்லைப்பிட்டிப் படுகொலை சம்பந்தமான வழக்கில் புலன் விசாரணைகளை நடத்தும் பொலீஸ் அதிகாரிகள் நேற்று நீதிமன்றத்தில் சமுகமளிக்கவில்லை. ஊர்காவற்றுறைப் பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரிமூலம் அவர்கள் அறிக்கையொன்றை நீதிமன்றத்திற்கு அனுப்பியிருந்தனர்.

அந்த அறிக்கையில்:-

கடற்படைக் கட்டளை அதிகாரி, பொலீஸ் பொறுப்பதிகாரி வண. அமல்ராஜ், அம்புலன்ஸ் சாரதி ஆகியோரிடம் வாக்குமூலங்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்காட்டில் வயோதிபர் நேற்றிரவு சுட்டுப் படுகாயம்

அச்சுவேலி, ஜூன்21

இடைக்காடு பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து ஓய்வுபெற்ற தபாலதிபரான வயோதிபர் ஒருவர் நேற்றிரவு 8 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

செல்லையா நடராஜா (வயது 63) என்பவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நிலையில் அச்சுவேலி ஆஸ்பத்திரி

(16ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பிக்களை நாடாளுமன்றுக்குள் தாக்க முயற்சி!

## ஆளுந்தரப்பினர் ஆவேசம் சபையில் நேற்று அமளிதுமளி

கொழும்பு, ஜூன் 21

**அரசபடைகள் மற்றும் துணை ஆயுதக் குழுக்களினால் வடக்கு - கிழக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை ஆட்சேபித்து நேற்று நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பமுற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆளுங்கட்சியினரால் தாக்கப்படும் நிலைமை ஏற்பட்டது.**

**நிலைமை கட்டுக்கடங்காமல் போவதை அறிந்து சபை நடவடிக்கைகளை சபாநாயகர் ஒத்திவைத்தமையால், ஏற்படவிருந்த பெரும் விபரீதமொன்று தவிர்க்கப்பட்டது.**

நாடாளுமன்றம் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் நேற்றுக்காலை கூடியது. கெப்பிட்டிக்கொல்லாவவில் கிளைமோர் தாக்குதலில் பலியான மக்கள் தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை சபையில் விடுத்துப் பேசினார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ.

கெப்பிட்டிக்கொல்லாவவில் பலியான மக்களுக்கு சபையில் இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்படவேண்டும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கஜேந்திரன் எம்.பியை கடுமையாகத் தாக்கினர்

கொழும்பு, ஜூன் 21

நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கைகலப்புச் சம்பவத்தின்போது தாம் கடுமையாகத் தாக்கப்பட்டார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான செ. கஜேந்திரன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் இன்று வன்னிக்கு!

கிளிநொச்சி, ஜூன்21

இலங்கை இனப்பிரச்சினைக்கு அனுசரணைப்பணி வகிக்கும் நோர்வேயின் கொழும்புக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று புதன்கிழமை கிளிநொச்சிக்கு அவசர விஜயம் ஒன்றை மேற்கொள்கின்றார்.

முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி வந்தடையும் அவர், 11 மணியளவில் விடுதலைப் புலிகளின் முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்திப்பார் எனக் கூறப்பட்டது.

## புலிகளின் பதில் நோர்வேயிடம்

கொழும்பு, ஜூன்21

யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக தமிழீழத் தேசியத் தலைவருக்கு நோர்வே அனுப்பிய கடிதத்துக்கு விடுதலைப் புலிகள் பதில் அனுப்பியுள்ளனர்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக ஐந்து கேள்விகளைக் கேட்டு ஜனாதிபதிக்கும், தமிழீழத் தேசியத் தலைவருக்கும் நோர்வே தனித்தனியாக கடிதங்களை அனுப்பி இருந்தது தெரிந்ததே.

இதற்கான பதிலை அனுப்புவதற்கு நேற்று 20ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் இது குறித்து 'ரோய்ட்டர்' செய்தி ஸ்தாபனத்துக்குத் தெரிவிக்கையில், (16ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவத் தலைமையகத்துக்கு வரும்

## படையினருக்கான பஸ் சேவை பாதுகாப்புக் கருதி நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 21

கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் கடமையாற்றும் இராணுவ அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் ஆகியோருக்காக வழங்கப்பட்டிருந்த பஸ் சேவை பாதுகாப்புக் காரணம் கருதி நேற்றுமுன்தினம் தொடக்கம் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இராணுவச் சிப்பாய்கள் பயணிக்கும் வாகனங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருக்கின்றனர் எனப் புல

(16ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகன் சிங்கின் விசேட பிரதிநிதி சென்னை வருகிறார்

### இலங்கை விவகாரம் குறித்து கருணாநிதியுடன் பேச்சு

சென்னை, ஜூன் 21

இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்கு, எத்தகைய நடவடிக்கைகள் உகந்தவையாக இருக்கும் என்பது குறித்து தமிழக முதல்வர் கருணாநிதியுடன் பேசுவதற்காக இந்திய மத்திய அரசின் விசேட பிரதிநிதி ஒருவரை பிரதமர் மன்மோகன் சிங், சென்னைக்கு அனுப்பிவைக்கிறார்.

இலங்கை நிலைவரங்கள் கொந்தளிப்பாக இருக்கின்றன. எனவே, அங்கு நிலைமை கட்டு மீறிப் போவதற்கு முன்னர் அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்கு இந்திய மத்திய அரசு உகந்த வழிமுறையைக் கையாண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரும் தீர்மானமொன்று கடந்த திங்கட்கிழமை சென்னையில் தமிழக முதல்வர் மு. கருணாநிதியின் தலைமையில் நடந்த ஆளும் [illegible] களின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு, இந்திய மத்திய அரசுக்கு இரவோடு இரவாக அனுப்பிவைக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் குறித்து முதல்வர் கலைஞர் கருணாநிதி நேற்றுக் காலை பிரதமர் மன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு இந்தியா போரை நிறுத்தவேண்டும்

### மௌனம் கலைந்து ஜெயலலிதா நேற்று திடீர் அறிக்கை

சென்னை, ஜூன்21

இலங்கை இனப்பிரச்சினைகு அமைதித் தீர்வு கிட்டுவதற்காக அந்த விடயத்தில் இந்திய மத்திய அரசு தலையிட்டுப் போரை நிறுத்தவேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா கோரியிருக்கின்றார்.



இலங்கை விவகாரம் தொடர்பாக இதுவரை ஆழ்ந்த மௌனம் காத்து வந்த ஜெயலலிதா, தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான உணர்வலைகள் கிளம்பத் தொடங்கியதை அடுத்து - மாநிலத்தில் ஆளும் தி.மு.க. கூட்டணி இலங்கை விவகாரம் குறித்துத் தனித் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதைத் தொடர்ந்து - திடீர் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதுவிடயத்தில் தனது மௌனத்தை கலைத்திருக்கின்றார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவில் தனித்திருந்த வயோதிபர் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன்21

புங்குடுதீவுப் பகுதியில் வீட்டில் தனித்திருந்த வயோதிபர் ஒருவர் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரவேலு சுப்பிரமணியம் (வயது 85) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். [illegible]

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பதிலடி கொடுக்கின்றோம் என்றசாட்டில் பொதுமக்கள் மீது தாக்குதல் வேண்டாம்!

## அரசபடைகளிடம் இந்துமாமன்றம் வேண்டுகோள்

கொழும்பு,ஜூன்21

பதிலடி கொடுக்கின்றோம் என்ற சாட்டில் பொதுமக்கள் மீது அரசபடைகள் தாக்குதல் நடத்தக்கூடாது. இவ்வாறான செயல்களில் ஈடுபடுவது எந்த நாட்டிற்கும் ஏற்புடைய செயற்பாடுகளும் அல்ல.

இவ்வாறு தெரிவித்துள்ளது அகில இலங்கை இந்துமாமன்றம்.

இதுவிடயமாக மேற்படி மன்றம் நேற்று விடுத்த செய்திக்குறிப்பில்:-

இந்த நாட்டு இந்து நிறுவனங்களினதும் ஆலய அறக்கட்டளைகளினதும் ஒன்றியமான அகில இலங்கை இந்துமாமன்றத்தின் முகாமைப் பேரவை கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய கூட்டத்தின் போது நாட்டின் இன்றைய பயங்கரமான நிலைமையை மிகவும் வேதனையுடன் ஆராய்ந்து பின்வரும் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

நாட்டின் பல பகுதிகளிலும் அண்மைக் காலத்தில் தொடர்ச்சியாக நடந்துவரும் படுகொலைகளையும் கொடூர வன்முறைச்செயல்களையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கடந்த வாரம் கெப்பிட்டிக்கொல்லாவ என்ற இடத்திலும் மன்னாரிலும் நடந்த அனர்த்தங்களையும் அதற்கு முன் நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற துர்ப்பாக்கியமான சம்பவங்களையும் ஆழ்ந்த வேதனையுடன் கண்டிக்கும் அதேவேளையில், சில வாரங்களுக்கு முன் யாழ். மாவட்டத்தின் மந்துவில் என்ற கிராமத்திலுள்ள இந்துக் கோயிலொன்றில் உற்சவ ஏற்பாடுகளுக்காகத் தங்கியிருந்த எட்டுப்பேர் கடத்தப்பட்டு மாயமாக மறைந்தமை-

மன்னார் - பேசாலை கத்தோலிக்க தேவாலயத்தில் கடந்த சனிக்கிழமையன்று நடந்த கொடூரச் செயல்கள் என்பன ஆண்டவன் எழுந்தருளியிருக்கும் இடங்களாகப் போற்றப்படும் புனிதத் தலங்களில் இடம்பெறுவதை எவரும் அனுமதிக்கக்கூடாது.

சாதாரண மக்களின் நலன்கருதி இந்த நிலைமை தொடராது நிறுத்தப்படும் வகையில் உடனடியாகவே அரசும் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன், இதில் சர்வதேச சமூகமும் உடன் தலையிட்டு ஆவன செய்வது இன்றியமையாதது எனவும் இந்நாட்டு இந்து மக்களின் சார்பாக பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றோம். - என்று அதில் உள்ளது.

## தச்சன்தோப்பிலிருந்து சிப்பாயின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூன்21

கைதடி தச்சன்தோப்பு பகுதியிலிருந்து நேற்று படைச்சிப்பாய் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிவான் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தியதுடன் பிரேத பரிசோதனைகளுக்காக சடலத்தை கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார். சிப்பாயின் மரணத்துக்கான காரணம் தெரியவரவில்லை.

இதற்கிடையில், தென்மராட்சிப் பகுதியில் மற்றுமோர் சிப்பாயின் சடலம் காணப்பட்டதாக இன்னொரு தகவல் தெரிவித்தது. எனினும், இதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

## தொழில்நுட்பக் கல்லூரி காவலாளி படுகொலை: அறிக்கை சமர்ப்பிக்க படை அதிகாரிக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்21

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி காவலாளியான கமலலோஜன் படுகொலை தொடர்பாக விவரமான அறிக்கை சமர்ப்பிக்கும்படி 511 ஆவது படையணி அதிகாரியை யாழ். நீதிமன்றம் பணித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை யாழ். நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

இந்த வழக்கின் கடந்த தவணை விசாரணையின்போது, அந்தப் பிரதேசத்தில் பணியாற்றிய படையினரின் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

அதன் அடிப்படையில், விவரமான அறிக்கையை சமர்ப்பிக்கும்படி சம்பவம் நடந்த இடத்துக்குப் பொறுப்பான 511ஆவது படை அணி அதிகாரிக்கு நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

## நாடாளுமன்றுக்கு மாட்டு வண்டிகளில் நேற்று சவாரி வந்த எம்.பிக்கள்!

கொழும்பு, ஜூன் 21

எரிபொருள் விலை அதிகரிப்பிற்கு ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நேற்று மாட்டுவண்டிகளில் நாடாளுமன்றம் வந்தனர்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாஸ்ரித்த திஸேரா, மஹிந்த ரத்தினதிலக, பாலித்த ரங்க பண்டார உட்பட சிலரே இவ்வாறு மாட்டுவண்டிகளில் வந்தனர்.

கட்சி ஆதரவாளர்கள் சகிதம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர சந்தியிலிருந்து மாட்டு வண்டிகளில் வந்த இவர்களை பாதுகாப்புக் காரணங்களுக்காக நாடாளுமன்ற பிரதான நுழைவாயிலைத் தாண்டிச் செல்லப் பொலீஸார் அனுமதிக்கவில்லை.

இதனையடுத்து, நீண்ட வாதப் பிரதிவாதங்களின் பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் மாட்டு வண்டிகளில் உட்செல்வதற்கு அனுமதி வழங்கப் பொலீஸார் முடிவு செய்தனர்.

பின்னர் ஆதரவாளர்கள் இன்றி ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் நாடாளுமன்ற பிரதான நுழைவாயிலின் ஊடாக மாட்டு வண்டிகளிலேயே பயன்படுத்த வேண்டிய நிலைமை எழுந்துள்ளது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

## சிமெந்துக்கு கட்டுப்பாட்டு விலை வணிகர்கள் இணைந்து தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூன்21

யாழ்ப்பாணத்தில் சிமெந்துக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.அரச அதிபரின் ஏற்பாட்டில் சிமெந்து முகவர்கள், யாழ்.வணிகர் கழகத்தினர் ஆகியோர் இணைந்து நேற்றுக் கட்டுப்பாட்டு விலையைத் தீர்மானித்தனர்.

இவ்விலை நிர்ணயப்படி ஆகக்கூடிய சில்லறை விலையாக பொதியொன்று ஹினோடே (சூப்பர் போசலோனா) 750 ரூபாவாகவும் மிற்சுமிசி 800 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது.

சோதனைக் கெடுபிடிகள், பாஸ் நடைமுறைகள் என்பவற்றால் ஏற்படும் பயணத் தடங்கல்கள், செலவுகள் குறைந்து நிலைமை சீரானால் இவ்விலைகள் இன்னும் குறையலாமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விலைகளை விட அதிக விலைக்கு சிமெந்து விற்பனை செய்யவேண்டுமென கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்களிடம் வணிகர்கழகம் கோரியுள்ளது.

## ஜனாதிபதி - ஜே.வி.பி. பேச்சுத் தோல்வி

### மின்சார ஊழியர் நாளை வேலைநிறுத்தம்!

கொழும்பு, ஜூன் , 21

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்புச் சட்டமூலம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஜே.வி.பி. தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று அலரிமாளிகையில் நடைபெற்ற இரண்டு மணிநேரப் பேச்சு தோல்வியில் முடிவடைந்தது.

அதனால், இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கங்கள் நாளை வியாழக்கிழமை முதல் தொடர்வேலைநிறுத்தத்தில் இறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை மின்சாரசபை சட்டமூலத்துக்கு ஜே.வி.பியின் தொழிற்சங்கங்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்துவந்தன. இதனையடுத்தே ஜனாதிபதி நேற்று ஜே.வி.பி. தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சு நடத்தினார்.

அமைச்சர் ஜோன் செனவிரட்ன, பிரதி அமைச்சர்களான ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய, மஹிந்தாநந்த அளுத்கமகே, திறைசேரிச் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர ஆகியோர் ஜனாதிபதியுடன் அரசின் சார்பிலும் -

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான கே. டி. லால்காந்த, பியசிறி விஜேநாயக்க உட்பட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் சிலர் ஜே.வி.பி. சார்பாகவும் பேச்சில் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சின்போது, இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பாக கடுமையான ஆட்சேபத்தை வெளியிட்ட ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தாம் முன்வைத்த திருத்தங்கள் எதுவுமின்றி இந்தச் சட்டமூலம் நாளை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுமானால் அதனை ஜே.வி.பி. எதிர்த்து வாக்களித்துத் தோற்கடிக்கும் என்று திட்டவட்டமாகக் கூறினர்.

இதனையடுத்து, மின்சாரசபை மறுசீரமைப்பு சம்பந்தமான புதிய சட்டமூலம் ஒன்றைத் தயாரித்து அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது பற்றி ஆராயப்பட்டது.

ஆனாலும், நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் மின்சாரசபை சட்டமூலத்தை ஜே.வி.பியின் ஆதரவுடன் நிறைவேற்றிய பின்பு புதிய சட்டமூலத்தைத் தயாரிக்க முடியுமென்று ஜனாதிபதி தெரிவித்த யோசனையை ஜே.வி.பி. ஏற்க மறுத்துவிட்டது.

இதனையடுத்து, ஜே.வி.பி. தொழிற்சங்கப் பிரதிநிதிகளைக் கடுமையாகச் சாடிய ஜனாதிபதி, திறைசேரியில் போதியளவு நிதி இல்லாத ஒரு சூழ்நிலையில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் இவ்வாறு நடந்துகொள்வது அநீதியானதெனக் குற்றஞ்சாட்டினார்.

ஆனாலும், தமது நிலைப்பாட்டில் மாற்றம் செய்யப்போவதில்லையென ஜே.வி.பி. பிரதிநிதிகள் தெரிவித்ததை அடுத்து நேற்றைய பேச்சு முடிவடைந்தது.

இதேவேளை,

முன்னதாகத் திட்டமிட்டபடி நாளை நாடாளுமன்றத்தில் மின்சாரசபை மறுசீரமைப்பு சட்டமூலத்தை சமர்ப்பிக்கவுள்ள அரசு, இச்சட்டமூலம் தொடர்பான வாக்கெடுப்பினைப் பிறிதொரு தினத்தில் நடத்துவதற்கு உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

அதேசமயம், இந்தச் சட்டமூலம் சபையில் நாளை சமர்ப்பிக்கப்படுமானால் அதனை வன்மையாக எதிர்ப்பதென ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.

அதேசமயம் ஜே.வி.பி. ஆதரவு தொழிற்சங்கங்கள் நாளை முதல் முழு அளவிலான வேலைநிறுத்தத்தில் ஈடுபடலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## சண்டிலிப்பாயில் பொதுசன உதவிப்பணம்

வலி.தென்மேற்கு,ஜூன்21

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப்பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணக்கொடுப்பனவைப் பெற்று வருபவர்களுக்கு ஜூன் மாதத்துக்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட தபாலகங்களுக்கு கொடுப்பனவுக்கான அனுமதிகள் பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பிரிவைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர், தொழுநோயாளர்கள், காசநோயாளர்கள், புற்றுநோயாளர்கள் ஆகியோரும் தமக்குரிய தபாலகங்களில் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (135)

## இந்தியாவில் தஞ்சமடைந்தோரில் இலங்கை அகதிகளே அதிகம்பேர்

சென்னை,ஜூன்21

பிற நாடுகளிலிருந்து இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள அகதிகளில் அதிகமானவர்கள் இலங்கையிலிருந்து வந்தவர்களே என்று தமிழகப் பத்திரிகையான 'தினமலர்' தெரிவிக்கின்றது.

நேற்று கடைப்பிடிக்கப்பட்ட அகதிகள் தினத்தையொட்டி 'தினமலர்' நாளேடு வெளியிட்ட ஆக்கம் ஒன்றிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

1983இல் இலங்கையில் உள்நாட்டுப் போர் மூண்ட போதுதான் அகதிகள் இந்தியாவிற்கு வரத்தொடங்கினர். இந்தியாவில் உள்ள அகதிகளில் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை அதிகமாகும்.

1983முதல் 1987வரை ஒருலட்சத்து 34ஆயிரத்து 53 அகதிகள் தமிழகத்தில் தஞ்சமடைந்தனர். 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி 25ஆயிரத்து 885 அகதிகள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். மீண்டும் ஏற்பட்ட உள்நாட்டுப் போரால் அகதிகள் தமிழகத்தை நோக்கி வரத்தொடங்கினர். இதனால், 1989இல் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது நிறுத்தப்பட்டது.

1989முதல் 1991வரை ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 37பேர் அகதிகளாக வந்தனர் இவர்கள் தமிழகத்திலும், ஒரிஸாவிலும் 298 முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். 1992 முதல் 1995வரை தாயகம் திருப்பி அனுப்பிவைக்கப்படும் முயற்சியில் 31ஆயிரம் அகதிகள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். 1991இல் ராஜீவ் கொலைக்குப் பின் இலங்கை அகதிகளை தாயகம் அனுப்பும் முயற்சி துவக்கப்பட்டது. இதில் 23ஆயிரம் பேர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 2005 இல் 2700 இலங்கை அகதிகள் இந்தியாவிலிருந்து தாயகம் அனுப்பிவைக்கப்பட்டனர். அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் சமீபத்திய தகவல்களின்படி 115 நாடுகளில் அகதிகளாக வாழ்வோர் மொத்த எண்ணிக்கை 1.9கோடி. இந்தியாவில் அகதிகளின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 39ஆயிரத்து 283 இதில் இலங்கை அகதிகள் எண்ணிக்கை மட்டும் 57ஆயிரத்து 274 பேராகும்.

இவர்களில் தமிழகத்தில் மட்டும் 56ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கையைச் சேர்ந்த அகதிகள் அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சமீபத்தில் இலங்கையில் மீண்டும் உள்நாட்டுபோர் மீண்டிருப்பதால் அகதிகள் வருகை அதிகரித்துள்ளது. கடந்த 3-4 மாதங்களில் ஏறத்தாழ 3 ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கை அகதிகள் இந்தியாவில் தஞ்சம்புகுந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.


உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T:021 222 6242
021 2223984
Fax: 021 222 5600
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying

யாழ் - கொழும்பு விமான சேவை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# மீண்டும் அமைதி முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டுமானால்....!

"யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செம்மையாகக் கடைப்பிடித்து, முன்னைய இணக்கப்பாட்டின்படி துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைந்து, அந்தக் குழுக்களைத் தமிழர் தாயகத்திலிருந்து அகற்றுவதற்கு அரசுத்தரப்பு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும் வரை அமைதிப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகளே இல்லை."

- இவ்வாறு விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்கள் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

விடுதலைப் புலிகளை அமைதிப் பேச்சுக்குத் திரும்பும்படி இலங்கை அரசின் சமாதானச் செயலக அறிக்கை கோரியிருப்பது குறித்து கேட்ட போதே புலிகளின் தலைமையோடு நெருங்கிய தொடர்புடைய வட்டாரங்கள், புலிகள் தரப்பின் நிலைப்பாட்டை இவ்வாறு வெளிப்படுத்தி யிருக்கின்றன.

தமிழர் தாயகத்தில், தமிழ் மக்களுக்கு எதிராக பிரகடனப்படுத்தப் படாத யுத்தம் ஒன்று அரசுத் தரப்பினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக் கின்றது. தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்படுகின்றார்கள். இந்நிலையில் - இத்தகைய அனர்த்தம் நீடிக்கையில் - அந்த அரசுடன் ஒரு மேசையில் போயிருந்து எப்படி அமைதிப் பேச்சை நடத்துவது என்று விடுதலைப் புலிகள் கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள்.

அமைதிப் பேச்சு - சமாதான முயற்சிகள் - எல்லாம் தேங்கி, கிணற் றில் போட்ட கல்லாக அமுங்கிப் போய்க் கிடக்கின்றன. இலங்கைத் தீவு யுத்தத்தின் விளிம்பில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

பேரழிவு தரும் கொடூர யுத்தத்துக்குள் முழுத் தீவுமே மூழ்கும் ஆபத்து நிலை எந்நேரமும் நேரலாம் என்ற அச்சம் நீடிக்கின்றது. அத்தகைய மிகமோசமான ஆபத்திலிருந்து முழு நாட்டையும் மீட்பதற்கு ஒரே வழி தான் உண்டு. அது - அமைதிப் பேச்சுகளை விரைந்து - தாமதமின்றி - ஆக்கபூர்வமான திசையில் முன்நகர்த்துவதுதான்.

அமைதிப் பேச்சுகளை மீள ஆரம்பிப்பதாயின் அதற்கு அவசரமாக - அவசியமாக - நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடு ஒன்று உள்ளது. சமாதான முயற்சிகளைத் தொடங்குவதற்கான புறச்சூழ்நிலையை - உகந்த நிலைமையை - ஏற்படுத்துவதுதான் அது.

அதைச் செய்யாமல் - பேச்சுக்கான புறநிலையை ஏற்படுத்தாமல் - தமிழர் தாயகத்தில் ஒரு மென் தீவிர யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டு - புலிகளை அமைதிப் பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுப்பது வெறும் அரசியல் பம்மாத்தின்றி வேறில்லை.

யுத்தத்தின் பிடிக்குள் நாடு சிக்குவதைத் தவிர்த்து, சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் நகர்த்தும் இதயசுத்தியான எண்ணம் தென்னிலங்கை அரசுத் தரப்புக்கு - தலைமைக்கு - இருக்குமானால், அந்த அமைதி முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான புறச்சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக பல கட்ட நடவடிக்கைகளை அது விரைந்து எடுக்கவேண்டும்.

* தமிழர் தாயகத்தில் பொதுமக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிராகத் தான் கட்டவிழ்த்து விட்டிருக்கும் மென்தீவிர யுத்தத்தை உடனடியாக நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

* தமிழர் தாயகப் பிரதேசத்தில் இயங்கும் ஒட்டுப்படைகள், துணைப் படைகள் போன்றவற்றின் ஆயுதங்களை அடியோடு களைந்து, தமிழர் தாயகத்திலிருந்து மூடை, முடிச்சுகளோடு அக்குழுக்களை அப்புறப்படுத்த வேண்டும்.

* புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும், ஜெனிவா இணக்கப்பாட்டையும் முழு அளவில் நடைமுறைப்படுத்த சம்மதிப்பதாக அறிவித்து அதைச் செயலில் காட்ட வேண்டும்.

* கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சு, பொதுமக்களுக்கு எதிரான கெடுபிடிகள், தமிழர் தாயகத்துக்கான அத்தியாவசியப் பொருள் விநியோகத்தைத் தடுத்து மட்டுப்படுத்தல் போன்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மாறான செயற்பாடுகளை ஒரேயடியாகக் கைவிட வேண்டும்.

* புலிகளுக்கு எதிராக சர்வதேச சமூகத்தைத் திருப்பிவிடும் பிரசாரத் தந்திரங்கள், பரப்புரை உத்திகள் போன்றவற்றைக் கைவிட்டு, தமிழர் தாயகத்தில் புலிகளுக்கு எதிராகத் தாம் கைக்கொள்ளும் பகையுறவு மற்றும் விரோதப் போக்குகளைத் துறந்து, தமது தமிழ் மக்கள் மத்தியில் புலிகளின் பிரதிநிதிகள் சுதந்திரமாக அரசியல் பணியாற்றக் கூடிய ஒரு சூழலைப் பேண வேண்டும்.

* இவை எல்லாவற்றுக்கும் மேலாக - அமைதித் தீர்வு கிட்டவும், ஈழத் தமிழர்களுக்கு அவர்களது நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் இணக்கப்பாடு ஒன்று ஏற்படவும் முட்டுக் கட்டையாகவும், இடைஞ்சலாகவும் நிற்கும் தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகளின் சகவாசத்தைத் துறந்து, அவற்றின் பிடியிலிருந்து வெளிப்படவும், போர் வெறி கொண்ட கடும் போக்கு இராணுவ அதிகார வர்க்கத்தின் ஆளுமைக்கு உட்படாமல் சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் செயற்படும் அரசியல் தலைமையாகத் தன்னை இனங்காட்டவும் அரசுத் தலைமை துணிந்து தயாராக வேண்டும்.

அத்தகைய ஓர் ஒழுங்கமைப்பு ஏற்பாட்டுக்கு அரசு இணங்கி, அதன்படி செயற்பட முன்வருமானால் அமைதிப் பேச்சு மேசைக்குப் புலிகளை மீள இழுத்து வந்து அமர்த்துவது சாத்தியமாகும்.

அதை விடுத்து, ஒரு புறம் ஒட்டுப்படைகள், இராணுவப் போக்கு அதிகார வர்க்கம், பௌத்த - சிங்கள மேலாதிக்கம் போன்றவற்றுக்கு விட்டுக் கொடுத்து, அவற்றின் தாளத்துக்கு ஆடிக்கொண்டு, மறுபுறம் புலிகளை அமைதிப் பேச்சுக்கு வருமாறு மீண்டும் மீண்டும் அழைப்பதில் அர்த்தம் ஏதுமில்லை.

# போர்நிறுத்தத்தைப்பேணுவதற்கு அரசு இரகசிய முயற்சி?

## பேச்சுக்குத் திரும்புமாறு புலிகளுக்கு அழைப்பு

கொழும்பு,ஜூன்21

வீழ்ச்சியுற்றுக் கொண்டிருக்கும் போர் நிறுத்தத்தை தொடர்ந்து நிலைநாட்டிக் கொள்வதற்கு பேச்சுக்கு வருமாறு அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளை அழைத்திருப்பதாக ராஜதந்திர வட்டார செய்திகள் கூறுகின்றன .

நாட்டின் வன்செயல்கள் அதிகரித்து வரும் நிலையில் அமைதி முயற்சிகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் அனுசரணையாளர்களான நோர்வே தரப்பினர் தீவிரமாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதாக தெரியவருகின்றது.

போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து பேணிக் கொள்வதற்கென நோர்வேயினரால் முன்வைக்கப்பட்டுள்ள சில முக்கிய கேள்விகளுக்கு விடுதலைப் புலிகளிடமிருந்து பதில் கிடைப்பதை அவர்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிகின்றது.

நோர்வேயியர்களுடன் ஒருங்கிணைந்து செயற்படும் இலங்கை அரசாங்கத்தின் சமாதானத்துக்கான செயலகம் விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்கு நேரடியாக அல்லது ஒஸ்லோ மூலமாகத் திரும்பும்படி கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்த மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்த ஐரோப்பிய ஒன்றியமும் இருதரப்பினரையும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சுகளை ஆரம்பிக்கும்படி வற்புறுத்தியுள்ளது. (ப)

## கரையோரம் 'தூங்கும்' படகுகள் வறுமையில் வாடும் மீனவர்கள்

### வடமராட்சியில் சோகநிலை

தென்மராட்சி ஜூன்21

வடமராட்சிப்பிரதேச கடற்றொழிலாளர்கள் தற்போதைய அசாதாரண சூழ்நிலையால் கடற்றொழிலுக்குச் செல்லாதுள்ளனர். அவர்களது பிளாஸ்ரிக் படகுகள் கரையேற்றப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. எரிபொருள்தட்டுப்பாடு, ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்வதில் அச்சம் போன்ற காரணங்களால் மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதில்லை.இதனால் படகுகள் கரையேற்றப்பட்டுள்ளன. தற்போது கட்டுமரத்தில் குறிப்பிட்ட தூரத்துக்கு மட்டுமே தொழிலாளர்கள்மீன்பிடிக்கச் செல்கின்றனர். அங்கு குறைந்தளவு மீன்களே பிடிக்கப்படுகின்றன. அவையும் உரியமுறையில் விற்பனை செய்யப்படாததால் மீனவக்குடும்பங்களின் பொருளாதாரம் பெரும்வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் மீன்பிடித் தொழிலை நம்பிப் பெற்ற கடன்களைஅடைக்கமுடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நடவடிக்கையை சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன.

தமது அன்றாட ஜீவனோபாயத்தை நடத்துவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ள இந்த நிலையில் மீன்பிடி உபகரணங்களால் என்னபயன் என்று கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (117-204)

## புற்றுநோயாளருக்கு செஞ்சிலுவை உதவி

சுழிபுரம்,ஜூன் 21

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவிகளை வழங்கியுள்ளது.

உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் வட்டுக்கோட்டை செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் பேராசிரியர் கணேசலிங்கம் உட்படபலர் கலந்து கொண்டனர். பணம் மற்றும் உதவிகள், புற்றுநோயால்பாதிக்கப்பட்டவர்களுக்குதொடர்ந்து வழங்கப்படும்எனத் தெரிவிக்கப் பட்டது. (204-28)

## பட்டப்படிப்புப் பிரிவில் புதிய கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்21

யாழ்ப்பாணம் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தினால் முதுமானி கற்கை நெறிக்கு ஏற்கனவே இருந்த அலகுகளுடன் இன்னும் பல புதிய அலகுகள் சேர்க்கப்படவுள்ளன.

இப்பட்டப்படிப்பில் ஏலவே இருந்த பிரதேசக் கற்கை நெறி, குடித்தொகைக் கற்கை நெறி, நூலக தகவல் தொழில்நுட்பக் கல்வி நெறி என்பவற்றுடன் தமிழ், இந்து நாகரிகம் , பொது நிர்வாக முகாமைத்துவம், சூழல் விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த ஒவ்வொரு புதிய பாட அலகிலும் தலா ஐம்பது பேர் இணைக்கப் படவுள்ளனர் எனவும்

இந்த ஒவ்வொரு புதிய பாட அலகிலும் தலா ஐம்பது பேர் இணைக்கப் படவுள்ளனர் எனவும் உயர் பட்டப் படிப்புகள் பீட அதிகாரி தெரிவித்தார்.

# பரிந்துரைகளை செயல்படுத்த அரச அதிகாரிகள் பின்னடிப்பு

## சாடுகிறார் மனித உரிமை ஆணைக்குழு தலைவர்

கொழும்பு,ஜூன் 21

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் தலைமைப் பணிமனையில் விசாரணைக்காக 10 ஆயிரம் முறைப் பாடுகள் காத்துக்கிடக்கின்றன. இத் தகவலை ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.ராமநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் ஆணைக்குழுவினால் விடுக்கப்படும் மிக முக்கிய சிபாரிசுகளை செயல்படுத்துவதில் அரச அதிகாரிகள், நிர்வாகத் தலைவர்கள் மற்றும் சட்டத்துறையினர் முதலானோர் பின்னடிக்கின்றார்கள் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் இந் நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்தைத் திருப்பும் வகையில் ஆணைக்குழு அவரை சந்திக்கத் தீர்மானித்திருப்பதாக ராமநாதன் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் பெரும்பாலான விசாரணைகள் ஆரம்பமாவதிலும் முற்றுப் பெறுவதிலும் ஏற்படுகின்ற தாமதம் குறித்தும் அவர் கவலை தெரிவித்துள்ளார். முறைப்பாடுகளை விரைவாகத் தீர்த்து வைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிய விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான தனிப்பட்டவர்களின் முறைப்பாடுகளை விரைந்து தீர்த்து வைக்க ஆணைக்குழு உறுதிகொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ப)

# பறை அடித்துப் பாரம்பரியம் காட்டி லண்டனில் எதிர்ப்புப் போராட்டம்

## அரசின் முயற்சிக்கு ஆப்பு

லண்டன், ஜூன் 21

பறை அடித்து பாரம்பரிய இசைக்கருவிகளை இசைத்து தமிழ் இளையோர் லண்டனில் நேற்றுமுன்தினம் நடத்திய எதிர்ப்புப் போராட்டம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தபீதி காரணமாக வீழ்ச்சியடைந்துவரும் தமது பொருளாதார மேம்பாட்டை வளப்படுத்திக்கொள்வதற்காகவும் - ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப்பயணிகளை இலங்கைக்கு வரவழைக்கும் நோக்குடனும் - பரப்புரை நிகழ்ச்சி ஒன்றை இலங்கை அரசு ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இலங்கை ஜனாதிபதியின் மனைவி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இலங்கைத் தீவில் இனவன்முறை கட்டவிழ்க்கப்பட்டு அங்கு பெரும் ஆள்படுகொலை இடம்பெறுகிறது என்பதை வெளிப்படுத்தவும் - இந்தப் பரப்புரை நிகழ்ச்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் தமிழ் இளைஞர்கள் மேற்கொண்ட போராட்டமே இந்தப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் பரப்புரையைப் பார்ப்பதற்கு எனத் திரண்ட லண்டன் குடிமக்கள் தமிழ் இளைஞர்களின் எதிர்ப்புப் போராட்டத்தால் கவரப்பட்டு அங்கு குவிந்து பறைச் சத்தத்துடன் [illegible] பாரம்பரிய நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர்-

இதனால், பலகோடி ரூபா செலவு செய்து இலங்கை அரசு எதிர்பார்த்த பலனைத் தரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# கோப்பாயில் மீட்கப்பட்ட இரண்டு சடலங்களையும் அடையாளம் காணுமாறு நீதிமன்றம் கோருகின்றது

தென்மராட்சி,ஜூன்21

கைதடி - கோப்பாய் தரவையில் மனித புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டு இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இரு சடலங்களையும் அடையாளம் காண உதவுமாறு சாவகச்சேரி நீதிமன்றினை மேற்கோள் காட்டி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலங்களிலிருந்து மீட்கப்பட்ட உடுப்புகள், மணிக்கூடு போன்றவற்றின் மூலம் அடையாளம் காட்டி உ[illegible]மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (117)

## நாளை

ஆனி - 08
வியாழக்கிழமை
22.06.2006
திதி : துவாதசி
பின்னிரவு : 12.27
நட்சத்திரம் :பரணி
பிற்பகல் : 4.42
சுபநேரம் : 7.24- 8.54
ராகுகாலம் : 1.24 - 2.54

## உதயவாக்கு

தீவர்த்தியை ஏற்றுவது தீவர்த்திக்கு ஒளி தருவதற்காக அன்று. அவ்வாறே நம்முடைய நற்குணங்கள் பிறர்க்கு உத [illegible] இருந்தும் இல்லாதவை போல தான். - ஷேக்ஸ்பியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசால் சமாதானத் தீர்வை இனிமேல் எட்ட முடியாது! ஆட்சியை கலைத்து தேர்தலை நடத்துவதே சிறந்தது!!

## ஐ.தே.கட்சியின் பிரதிச் செயலர் கருத்து

கொழும்பு, ஜூன் 21

''இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க முடியாமல் - நிலையான சமாதானத்தை உருவாக்கமுடியாமல் - போலியாக - பலவீனமாக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் இந்த அரசு ஆட்சி அதிகாரங்களை உடனடியாக ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஒப்படைக்கவேண்டும். இல்லையேல் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தவேண்டும் அப்போது தான் இந்த நாட்டுக்கு நல்லகாலம் பிறக்கும்.''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுமுன்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுபற்றி அவர் தொடர்ந்து கூறுகையில் தெரிவித்ததாவது:-

நாட்டில் சமாதானம் மலரும் என நாம் பொறுமையுடன் காத்திருந்து ஏமாந்து விட்டோம். சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்புக் கொஞ்சமேனும் இல்லை.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதிலிருந்து இன்றுவரை சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அவருக்கு முழு ஆதரவையும் நாம் வழங்கி வருகின்றோம். எமது ஆதரவை அவர் சரியாகப் பயன்படுத்தத் தவறி விட்டார்.

நாளுக்கு நாள் நாட்டின் நிலைமை மிக மோசமாகிக்கொண்டு போகின்றது. தினமும் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்துடன் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்தப் பயங்கர நிலை நாடு முழுவதிலும் காணப்படுகின்றது.

இந்த நிலைமையை இல்லாதொழித்து புலிகளுடன் பேச்சைத் தொடங்கி நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்கான ஆக்கபூர்வமான ஏற்பாடுகள் எதனையும் ஜனாதிபதி இதுவரை மேற்கொள்ளவில்லை.

ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதுபோல் சர்வகட்சி மாநாடுகளை நடத்தியும், குழுக்களை அமைத்தும் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கிறார் ஜனாதிபதி. இந் நாட்டு மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்காக நடத்தப்படுகின்ற நாடகங்களே இவை என அனைவரும் இப்போது விளங்கிக்கொண்டுள்ளனர்.

சமாதான முயற்சியை நோக்கி இந்த அரசால் ஓர் அடியேனும் நகரமுடியாது என்பது தெளிவாகியுள்ளது. இது தொடர்பாக அரசு எதையும் செய்யமுடியாமல் தடுமாறுகிறது.

ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கிவிட்டு இந்த அரசு வீடு செல்வதைத் தவிர வேறுவழி கிடையாது. அவ்வாறு செய்தால் மட்டுமே சமாதானத்திற்கான வழி பிறக்கும். இல்லையேல், உடனடியாகப் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் - எனக் கூறினார். (க)

## மட்டக்களப்பு நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி

கொழும்பு, ஜூன் 21

வன்செயல்கள் நிறுத்தப்பட்டு, சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் மட்டக்களப்பு நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

ஈ.பி.ஆர். எல்.எப். அமைப்பின் தியாகிகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட இப்பேரணி, மட்டக்களப்பு பஸ் நிலைய காந்தி சதுக்கப் பகுதியில் இருந்து ஆரம்பமாகி முனைவீதி, பிரதான வீதி, மத்திய வீதி ஊடாக வைத்தியசாலைச் சந்தியை அடைந்து நிறைவுபெற்றுள்ளது.

இப்பேரணியின் நிறைவில் ஜனாதிபதி, மட்டக்களப்பு இராணுவ இணைப்பதிகாரி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை ஆயர் ஆகியோருக்கான மகஜர்களும் கையளிக்கப்பட்டன. (க)

## மூளாய் வயல்களில் வெங்காயச் செய்கை மும்முரம்

நவாலி, ஜூன்21

மூளாய்ப் பகுதி வயல்களில் வெங்காயச் செய்கை மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

வயல்களில் அறுவடை முடிந்த பின், தற்போது வெங்காயம் நடுகையில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளமையைக் காணமுடிகிறது. (100)

## அஞ்சல் சிற்றூழியர்களுக்கு புதிய சீருடைகள் அறிமுகம்

தென்மராட்சி, ஜூன்21

அஞ்சல் அலுவலக சிற்றூழியர்களுக்கு புதிய சீருடைத் துணிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

அஞ்சல் சிற்றூழியர்களுக்கு முன்னர் காக்கி நிறச் சீருடைத் துணிகள் வழங்கப்பட்டன. பல வருடங்களுக்குப் பின்னர் தற்போது கடும் நீல நிற நீளக் காற்சட்டை துணியும் மெல்லிய நீல நிற சேர்ட் துணியும் அஞ்சல் அலுவலகத்தால் கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளன.

சீருடைத்துணிகளை பெற்றுக்கொண்டவர்கள் புதிய சீருடையில் கடமைக்கு சமுகம் அளிப்பதைக் காணமுடிகிறது.

இதேவேளை - சீருடை தைப்பதற்கான தையல்கூலி வழங்குவது தொடர்பாக, எவ்வித அறிவித்தலும் இதுவரை அஞ்சல் திணைக்களத்தால் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (204-117)

# நிவித்திகலை பகுதிகளில் தமிழர் கைது அதிகரிப்பு

நிவித்திகலை, ஜூன் 21

நிவித்திகலைப் பகுதியில் வாழும் தமிழ், சிங்கள உறவுகளைச் சீர்குலைக்கச் சில பேரினவாத சக்திகள் முயன்றுவருகின்றன.

கடந்த வாரம் நிவித்திகலை நகருக்கு வந்த தமிழ் இளைஞர்களை 'புலிகள்' எனக் கூறி நிவித்திகலைப் பொலீஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்றும் இடம்பெற்றது.

விசாரணையின்பின் தமிழ் இளைஞர் விடுதலை செய்யப்பட்ட போதிலும் நிவித்திகலைப் பகுதித் தமிழர்கள் கைது தொடர்ந்து இடம்பெறுகிறது. இதனால், இங்கு பதற்ற நிலை காணப்படுகிறது.

கடந்த புதன்கிழமை நிவித்திகலை நகரிலுள்ள தமிழர் ஒருவருக்குச் சொந்தமான வர்த்தக ஸ்தாபனம் நிவித்திலை பொலீஸாரின் சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதனையடுத்து நிவித்திகலை நகரிலுள்ள தமிழ் வர்த்தகர்கள் தமது அன்றாட வியாபாரங்களை அச்சத்துடனும் - பீதியுடனும் நடத்திவருகின்றனர்.

தமிழ் இளைஞர்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் நிவித்திகலைப் பொலீஸ் நிலையம் கடந்த 12ஆம் திகதி வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்த தமிழ் இளைஞனின் மரணம் குறித்து இதுவரை எவரையும் கைதுசெய்யவில்லை. நிவித்திகலை வட்டாபொத்த மேற்பிரிவைச் சேர்ந்த கே.சிவாஜி (வயது 29) என்பவரே பரிதாபகரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டவராவார்.

இக்கொலை குறித்து மௌனம் சாதிக்கும் நிவித்திகலைப் பொலீஸ்நிலையம், நிவித்திகலையில் புலிகள் ஊடுருவலாம் என புரளியைக் கிளப்பித் தமிழர்களை விசாரணைக்குட்படுத்தி வருகிறது. அதேவேளை, நிவித்திகலைப் பகுதிக்குப் புலிகள் ஊடுருவலாம் என்ற சந்தேகத்தில் நிவித்திகலை நகரில் விசேட கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (க)

## முந்தல் பகுதியில் 2 பெண்கள் கைது

புத்தளம், ஜூன் 21

சுமார் 32 வயதும், 38 வயதும் மதிக்கத்தக்க யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இரு தமிழ்ப் பெண்களை முந்தல் பொலீஸார் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர்.

முந்தல் பகுதியிலுள்ள குடியிருப்பு என்னும் இடத்திலுள்ள வீடொன்றில் வைத்துக் கடந்த சனியன்று இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் வெளிநாடு செல்வதற்காக இங்கு வந்து தங்கியதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. முந்தல் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி வீ.மாசக்கார தலைமையிலான பொலீஸ் குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (க)

## கைதடியில் குடிதண்ணீர் விநியோகத்திற்கு மேலும் 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஜூன் 21

கைதடி, ஊரியான் கிராமத்தில் குடிதண்ணீர் விநியோகம் செய்யும் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு என நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் மேலும் 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

இந்தக் கிராமத்தில் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ளும் திட்டத்துக்கு ஏற்கனவே ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-

சங்கானை மருத்துவமனை அபிவிருத்தி வேலைகளுக்கு 2 லட்சம் ரூபாவும் சாவகச்சேரி சிவன் கோயில் கலாசார மண்டபம் அமைப்பதற்கு 2 லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (204-117)

## நல்லூர்க்கோட்ட அதிபர்கள் கூட்டம்

குருநகர், ஜூன் 21

நல்லூர்க் கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்கள் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நல்லூர்க் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லூர்க் கல்விக்கோட்டப் பாடசாலைகளில் தரம்5 இல் கற்பிக்கும் ஆசிரியர்களையும் தரம் 10 தொடக்கம் 13 வகுப்புகளில் கணக்கீடு மற்றும் வணிகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நல்லூர்க் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இவ்வருடம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, ஆங்கில தினம், தமிழ்த் தினம், வணிக தினம் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் இக்கூட்டத்தில் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (51)

## சமய சந்திகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 21

கோண்டாவில் ஸ்ரீ சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள நிகழ்வில் எதிர்வரும் 25ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று வைரவப் பெருமான் தீர்த்தமாடும் நிகழ்வு இடம்பெறும். (204)

★ ★ ★

சுழிபுரம், ஜூன் 21

சுழிபுரம் பறாளை ஈஸ்வர் விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஜூலை முதலாம் திகதி தேர்த்திருவிழாவும், மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (28-204)

★ ★ ★

சுழிபுரம், ஜூன் 21

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (204-28)

★ ★ ★

சுழிபுரம், ஜூன்21

தொல்புரம் கிழக்கு துரையன் வளவு பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

ஆலயத்துக்கு புதிய வசந்த மண்டபம், உள் சுற்றுமண்டபம் என்பன அமைக்கப்பட்டு, ஆலயம் புதுப்பொலிவோடு விளங்குகிறது. (204-28)

★ ★ ★

குருநகர், ஜூன்21

அச்சுவேலி காட்டுமலை கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு கைலாசவாகன உற்சவமும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் அடுத்த நாள் தேர்த்திருவிழாவும் மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204-51)


**Available Office Space**
**600Sq.ft**

* Ideal for N.G.O.
* Adjoining Construction Guarantee Fund and Euroville Conference Hall.
* Place: No.17, Agrarian Service Lane, Nallur
* Rent: Negotiable
* Contact: Euroville Investment (Pvt) Ltd, 866, Point Pedro Road, Nallur.

T.P.: 021 222 2849, 021 222 7012

(C/49766)



**மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்**



எமது வித்தியாலயத்தின் ஓவிய, சிற்பக் கலை ஆசிரியராகப் பணிபுரிந்து கல்லூரியின் ஆக்கச் செயற்பாடுகளில் முன்னின்று உழைத்த நல்லாசானும் பழைய மாணவருமாகிய அரியாலையூர்

**திரு.வல்லிபுரம் கந்தையா**

அவர்களுக்கு இலங்கை அரசின் இந்த ஆண்டிற்கான கலையுயர் கலாபூஷணம் விருது கிடைத்தமையையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைவதோடு அவரை மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்,
(ஸ்ரான்லிக் கல்லூரி).

(சி/49760)(32-15-45)



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



**முத்தன் கிருஷ்ணன்**
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்)

பிறப்பு
06-03-1935

இறப்பு
02-07-2005

''அன்பின் திருவுருவே அப்பா - உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்''

'பிறேமாவதி இல்லம்'
வாகீஸ்வரி வீதி,
கோண்டாவில் வடக்கு.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(சி/49768)(32-15-45)



**பதவி வெற்றிடம்**

மாணவர் விடுதி மேற்பார்வையாளர் பதவிக்கு 55 வயதுக்கு குறையாத ஆங்கில அறிவுடைய ஆண்களும் கணனிப் போதனாசிரியர் பதவிக்கு கணனியில் போதிய தகைமை பெற்ற இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

முடிவுதிகதி: 30.06.2006

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/49767)(32-45-15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுக்கமான பொருளாதாரத் தடைகளை ஈரான் எதிர்நோக்க நேரிடும்!

## புதிய யோசனைகளை ஏற்றுக்கொள்ள புஷ் வற்புறுத்துகிறார்

நியூயோர்க், ஜூன் 21

ஈரான் தனது அணு செயற்பாடுகளை முடக்கிக் கொண்டு மீண்டும் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் இறுக்கமான பொருளாதாரத் தடைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.



ஈரான் அதிபர் மகமூத் அகமதி ஜெனாட்

இவ்வாறு எச்சரித்திருக்கிறார் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்.

ஈரான் தனது சர்ச்சைக்குரிய அணு செயற்பாடுகளை கைவிட்டால் வர்த்தக மற்றும் பாதுகாப்பு உத்தரவாதங்கள் வழங்கப்படும். இதை ஈரான் மறுக்குமானால் மேற்கொண்டும் தனிமைப்படுத்தலுக்கு அது உள்ளாகும் என்று புஷ் கூறியுள்ளார்.

ஈரான் அணு குண்டு ஒன்றை தயாரிப்பதில் ஈடுபட்டிருக்கிறது என்ற அச்சத்தை நீக்குவதற்கு அது முன்வரவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் எதிர்பார்க்கின்றன.

தனது அணுத்திட்ட செயற்பாடுகளில் இராணுவ நோக்கங்கள் இல்லையென்று ஈரான் தெரிவித்துவரும் அதேவேளை, கடைசியாக முன்வைக்கப்பட்டுள்ள சலுகைகளை ஏற்றுக்கொள்ளுமா இல்லையா என்பது பற்றி இன்னமும் முறையாக அறிவிக்கவில்லை.




அமெரிக்க அதிபர் புஷ்

முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் ஒருபடி முன்னேற்றகரமாக இருக்கின்றன என்று ஈரானிய அதிபர் மகமூத் அகமதி ஜெனாட் தெரிவித் திருக்கிறார்.

என்றாலும் ஈரான் தனது சொந்த யோசனைகளையும் உள்ளடக்கிய பதிலை விரைவில் அனுப்பிவைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். (ப)

## ஆப்கானில் தாக்குதல் 32 அப்பாவிகள் பலி

கந்தகார், ஜூன்21

ஆப்கானில் தலிபான் தீவிரவாதிகள் நடத்திய கொலைவெறித் தாக்குதலில் 32 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பத்துப் பேரை காணவில்லை.

இது தொடர்பாக ஆப்கன் நாடாளுமன்ற உறுப்பினர் தாத்முகமது கான் கூறியதாவது,

ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ஹெல்மெண்ட் மாகாணத்தில் கடந்த ஞாயிறன்று தலிபான் தீவிரவாதிகள் நடத்திய கொலைவெறித் தாக்குதலில் 32 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் எனது நண்பர்கள் மற்றும் உறவினர்கள். அந்தப் பகுதியைச் சேர்ந்த மேலும் பத்துப் பேரை காணவில்லை என்றார். (202)




## தமிழகத்தின் ஆளுநராக தொடர்கிறார் பர்னாலா

சென்னை, ஜூன்21

தமிழக ஆளுநராக உள்ள சுர்ஜித் சிங் பர்னாலாவுக்கு (வயது 81) பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. பதவி நீட்டிப்பு வழங்குவதற்கான ஒப்புதலை குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் கடந்த 9ஆம்திகதி அளித்தார்.

இதைத் தொடர்ந்து ஆளுநராக பர்னாலா மீண்டும் பதவி ஏற்கிறார்.

2011 ஆம் ஆண்டு வரை தமிழக ஆளுநராக அவர் பதவி வகிப்பார். (202)

# இலங்கைப் படை கணவரைக் கொன்றது; இப்போது மகனையும் சுட்டுவிட்டது!

## இராமேஸ்வரம் மீனவரின் தாயார் கண்ணீர்

சென்னை,ஜூன்21

இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில்தான் எனது கணவரையும் பறிகொடுத்தேன். தற்போது எனது மகனையும் இலங்கைக் கடற்படை சுட்டுக்காயப்படுத்திவிட்டார்கள். இவ்வாறு கவலை தெரிவித்தார் காயமடைந்த தமிழக மீனவரின்தாயார் சேதுராணி.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த சனிக்கிழமை இரவு கச்சதீவருகே மீன் பிடித்துக்கொண்டிருந்தனர். அப்பகுதிக்கு வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களின் விசைப்படகுகளை நோக்கி நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் நடராஜபுரத்தைச் சேர்ந்த நா.நம்புராஜனின் முகத்தில் குண்டு பாய்ந்தது.

அவருடன் கூட இருந்த மீனவர்கள் அவரை இராமேஸ்வரத்திற்குக் கொண்டு சென்றனர். தற்போது அவர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக காயமடைந்த மீனவரின் தாயார் சேதுராணி செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்:

எனது கணவர் நாகலிங்கமும் ஒரு மீனவர். அவர் 1993ஆம் ஆண்டு தொழிலுக்குச் சென்றபோது இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகிவிட்டார். அந்தச்சோகம் இன்னும் மறையவில்லை.

தற்போது எனது மகனும் இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டில் தான் காயமடைந்துள்ளார் - என்று கண்ணீர் மல்கக் கூறினார். (202)

# நாதுலா கணவாய் வழிவர்த்தகம் இந்தியா - சீனா இடையே ஆரம்பம்

இந்தியா - சீனா இடையே 44 ஆண்டுகளாக தடைப்பட்டிருந்த எல்லை வர்த்தகம், நாதுலா கணவாய் வழியாக மீண்டும் தொடங்குகிறது. இதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தத்தில் இந்தியாவும் சீனாவும் கையெழுத்திட்டன.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியா-சீன எல்லையில் அமைந்துள்ள நாதுலா கணவாய் வழியாக வர்த்தகம் நடைபெற்றது.

கடந்த 1962ஆம் ஆண்டு நிகழ்ந்த இந்தியா - சீனப் போருக்குப் பின்னர் இந்த வர்த்தகம் தடைப்பட்டது. கொல்கொத்தாவில் இருந்து 550 கி.மீ., தூரத்தில், கடல் மட்டத்தில் இருந்து நான்காயிரத்து 545 மீற்றர் உயரத்தில் நாதுலா கணவாய் அமைந்துள்ளது. இந்நிலையில், இருநாடுகளின் நட்புறவை மீண்டும் பலப்படுத்தும் விதமாக எல்லைப்புற வர்த்தகத்தை மீண்டும் தொடங்குவது குறித்து இருநாட்டு உயர் அதிகாரிகளும் திபெத் தலைநகர் லாசாவில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் நாதுலா கணவாய் வழியாக வரும் ஜூலை 6ஆம் திகதி முதல் மீண்டும் இருதரப்பு வர்த்தகத்தை தொடங்க இருநாடுகளும் சம்மதம் தெரிவித்தன.

இது தொடர்பான ஒப்பந்தம் நேற்று முன்தினம் இரவு கையெழுத்தானது.

இந்தியக் குழுவிற்கு தலைமை வகித்த வர்த்தகத்துறை கூடுதல் செயலர் கிரிஸ்டி பெர்னாண்டஸ் மற்றும் சீனக் குழுவிற்கு தலைமை வகித்த ஹாவ் பெங் ஆகியோர் இதுகுறித்து கூறுகையில், "இந்தியா - சீனா இடையே எல்லைப் பகுதி வழியாக வர்த்தகம் தொடங்குவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இதனால், வர்த்தகம் மட்டுமன்றி, இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளும் விரிவடையும். வர்த்தகத்திற்காக எல்லை திறக்கப்படுவதால், பொருளாதார ரீதியாக இந்தப் பகுதி தனிமைப்படுத்தப்பட்டதும் முடிவுக்கு கொண்டு வரப்படும். சந்தைப் பொருளாதாரம் மேலும் வலுவடையும். சீனாவை தெற்காசிய நாடுகளுடன் இணைக்கும் இந்த வர்த்தக வழித்தடத்தால் வர்த்தகம் அதிகரிப்பதோடு, போக்குவரத்து, கட்டுமானம் மற்றும் சேவை தொழில்களும் வளர்ச்சி அடையும்," என்றனர்.


புதிய ஒப்பந்தம் மூலம் நாதுலா கணவாய் வழியாக இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தில் பத்து சதவீதம், அதாவது நான்காயிரத்து 500 கோடி அளவிலான வர்த்தகம் இப்பாதை வழியாக நடைபெற வாய்ப்பு ஏற்படும். இந்த எல்லைப்புற வர்த்தகத்தின் மூலம் 30 வகையான பொருள்களை பரிமாற்றம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. (202)

## விமானம் மூலமும் அகதிகள் தமிழகம் பயணம்

கொழும்பில் இருந்து விமான மூலம் இலங்கை அகதிகள் 10 பேர் கடந்த சனிக்கிழமை சென்னை வந்தனர். இவர்கள் ராமேஸ்வரம் மண்டபம் முகாமில் திங்கட்கிழமை முறைப்படி பதிவு செய்தனர். இதுவரை தமிழகம் வந்த அகதிகளின் எண்ணிக்கை 4 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

இலங்கை திருகோணமலை பகுதியிலிருந்து 2 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆண்களும் 8 பெண்களும் அகதிகளாகக் கொழும்பில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு கடந்த சனிக்கிழமை சென்னை வந்து சேர்ந்தனர்.

இவர்கள் சென்னையில் உள்ள மறுவாழ்வுத் துறை ஆணையரிடம் அனுமதி பெற்றனர். பின்னர் பஸ்ஸில் மண்டபம் வந்து சேர்ந்தனர். மண்டபம் முகாம் அலுவலகத்தில் இவர்கள் முறைப்படி பதிவு செய்ததையடுத்து இவர்கள் அனுமதிக்கப்பட்டனர். (202)



சர்வதேச ரீதியில் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும் அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் அல்கெய்தாத் தலைவர் கொல்லப்பட்டார் என்ற செய்தியை வெளியிட்டமைக்காக பத்திரிகையாளர் கையதுல்லா கான் கடத்திக் கொல்லப்பட்டதைக் கண்டித்தும் பாகிஸ்தான் ஊடகவியலாளர்கள் கடந்த திங்கட்கிழமை இஸ்லாமபாத் நாடாளுமன்றத்துக்கு முன்னால் தமது கைகளையும் வாயையும் கட்டியபடி அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# ஈழத் தமிழர் நிலைகுறித்து ஆராய அனைத்துக் கட்சி கூட்டம் அவசியம்

## விடுதலைச் சிறுத்தைகள் வலியுறுத்து

சென்னை, ஜூன் 21

இலங்கைத்தமிழ்ப்பிரச்சினை பற்றி விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டவேண்டுமென்று விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு நேற்று முன்தினம் அவசரக்கோரிக்கையொன்றை விடுத் திருக்கிறது.

நேற்றுமுன்தினம் மாலை சென்னையில் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச்செயலாளர் தொல்.திருமாவளவன், இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தைத் தமிழக அரசுஅவசரமாகக் கூட்ட வேண்டுமெனக் கோரியிருந்தார். அவர் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

இலங்கையில் இராணுவத்தின் தாக்குதலுக்குப் பயந்து தமிழர்கள் அகதிகளாகத் தமிழகத்துக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். தமிழகம் நோக்கிவரும் அகதிகளையும் சிங்கள இராணுவம் தாக்குவதாகச் செய்திகள் வருகின்றன. இந்தியக் கடல் எல்லையில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்கள் மீதும் இலங்கை இராணுவம் துப்பாக்கியால் சுட்டுள்ளது. இதில் பலர் காயமடைந்துள்ளனர். பாதிக்கப்படும் ஈழத் தமிழர்களைப் புறந்தள்ளும் மத்திய அரசு, தமிழக மீனவர்கள் நலன்கருதியாவது இலங்கை அரசை எச்சரிக்க வேண்டும்.

இச்சூழலில் காவிரிப் பிரச்சினை, ஈழத் தமிழர் பாதுகாப்பு, தமிழக மீனவர் பாதுகாப்பு ஆகியவை குறித்து கலந்தாலோசனை செய்வதற்கு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைத் தமிழக அரசு உடனடியாகக் கூட்டவேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# ஆங்சான் சூகியை விடுவிக்குமாறு மனித உரிமை அமைப்புக் கோரிக்கை

மியான்மர் ஜனநாயக இயக்கத் தலைவர் ஆங்சான் சூகியை விடுதலை செய்யும்படி மியான்மர் இராணுவ அரசிடம் மனித உரிமைகள் அமைப்பான ஆம் னெஸ்டி இன்ரர் நஷனல் கோரிக்கை விடுத்துள்ளது.

இராணுவ அரசால் ஆங்சான் சூகி 10 ஆண்டுகளுக்கு மேலாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். மத்திய யாங்குன் நகரிலுள்ள தனது வீட்டிலேயே ஆங்சான் சூகி தனது 61 வயது பிறந்த நாளைக் கடந்த திங்கட்கிழமை கொண்டாடினார்.

உலக நாடுகள் கோரிக்கை விடுத்த போதிலும் ஆங்சான் சூகியை விடுதலை செய்ய மியான்மர் அரசு மறுத்து வருகின்றது. தொடர்ந்தும் ஒரு வருடத்திற்கு வீட்டுக் காவலை நீடித்துள்ளது.

ஆங்சான் சூகி தலைமையிலான ஜனநாயகத்துக்கான தேசிய லீக் அமைப்பு 1990 இல் நடந்த தேர்தலில் வெற்றிபெற்ற போதிலும் அதை இராணுவ அரசு தொடர்ந்தும் அதிகாரத்தில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 26 - 01 - 1981

மறைவு 13 - 05 - 2006



## அமரர் இரத்தினம் செந்தூரன்

(உரிமையாளர், ஆஞ்சநேயர் றேடர்ஸ், வங்களாவடி, வேலணை)

கடந்த 13.05.2006 அன்று அகால மரணமடைந்த எமது அன்புச் செல்வம் செந்தூரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.06.2006) வியாழக்கிழமை சாட்டி தீர்த்தக்கரையிலும் 24.06.2006 சனிக்கிழமை ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு:

நாட்டின் சூழ்நிலை காரணமாக இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

5ஆம் வட்டாரம்,
வேலணை வடக்கு.

(51441)(32-15-11)

பிரிவால் துயருறும்:
இரத்தினம் குடும்பத்தினர்.


### ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (51)


மீண்டும் புதுப்பொலிவுடன் வெளிவந்திருக்கிறது

## பூங்கனி

சிறுவர் மாத இதழ்



நாடுமுழுவதும் பரபரப்பான விற்பனையில்



## LONDON ENGLISH COLLEGE

LONDON ENGLISH COLLEGE

புதிய வகுப்புகள் ஆரம்பம்

24.06.2006

FREE STUDY PACK

3 MONTHS

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட கற்கைநெறி..........

DIPLOMA IN ENGLISH — WEEK DAYS / WEEK-ENDS

வெளிநாட்டில் பட்டப்படிப்பை எதிர்நோக்கும் மாணவர்களுக்கான கற்கை நெறி.......

IELTS — WEEK-ENDS

- BRITISH கற்பித்தல் முறையிலான ஆங்கிலக்கல்வி....
- ஒவ்வொரு திறனும் ஒவ்வொரு தனித்தனி ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டலில் கற்றுக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்...... ( READING, WRITING, LISTENING, SPEAKING)
- பயிற்சிக் கட்டணங்கள் தவணை முறையில்.........
- வகுப்பில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.

BCNS

NO.105, ARASADY ROAD, JAFFNA.
T.P: 222 5889, 077 9508972



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



6/5, பெருமாள் கோயிலடியைப்
பிறப்பிடமாகக் கொண்ட

## பொன்னுத்துரை முரளீதரன்

தோற்றம் 03-09-1953

மறைவு 22-05-2006

ஆறாத் துயரில் வாடுகிறேன் ஐயோ உன் பிரிவு
நீறாய்ப் போன உன் உருவை நாளும் நினைந்து துடிக்கின்றேன்
மாறாத் துயரில் எனைவிட்டு ஏன் பிரிந்தாய்
பேறாய் எடுத்த உன் முடிவு சரியோ நீ சொல்வாய் மகனே...

மீரா என்றழைத்த நீயண்ணா இன்று நீ
மீளாத் துயில் கொண்டது ஏனோ!
வாழ் நாளெலாம் தந்தை போல் நின்ற உனை
பாழ்பட்ட காலன் பறித்தானோ உன் உயிரை!

நீ ஏன் இந்தத் தூரப் பயணமண்ணா!
நீ படித்த புத்தகமும் அனாதையாய்க் கிடக்குதண்ணா!
நீ அமர்ந்த கதிரையும் வெறுமையாகி விட்டதண்ணா!
நீ தந்த பொருள்களெல்லாம் பிரபு என்றுன் குரலில் அழைக்குதண்ணா!

உமா என்று நீயழைத்தால் அப்பாவோ என்று தோணும்
அப்பாவைக் காணத்தானோ நீண்ட பயணமோ!
பிறப்பு வேறொன்று உண்டானால் நீயே அப்
பிறப்பிலும் அண்ணனாக வேண்டுமென வேண்டுகின்றேன்

புன்முகத்தோடு எனை மகிழ்வித்த குலவிளக்கே!
அன்பான என் அமுத சுரபியே
பண்பு நிறைந்த என் அட்சய பாத்திரமே!
உன் நினைவு அண்ணன் நீறாகும் வரை மாறாதடா
உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரபா பார்மசி,
315, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அம்மா, சூரியா, உமா,
பிரபு, பாபு, மீரா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலைகளில் நிலவும் பரிசாரகர் வெற்றிடம் நிரப்பப்படும்

## பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் நடவடிக்கை

குருநகர்,ஜூன்21

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கீழ் இயங்கி வரும் வைத்தியசாலைகளில் நிலவும் பரிசாரகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:-

சுகாதாரத்திணைக்கள பணிமனையின் கீழ் இயங்கி வரும் வைத்தியசாலைகளில் 95 பரிசாரகர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்படாது உள்ளன.

சுகாதார சுத்திகரிப்பு ஊழியர்களுக்கு பரிசாரகர் பயிற்சிகள் வழங்கப்பட்டு வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் முதற்கட்டமாக எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் பரிசாரகர்களுக்கான பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப் படவுள்ளன. பயிற்சி முடிவில், பரிசாரகர்களாக பதவி உயர்வு வழங்கப்படும் - என்றார் அவர்.

இதேவேளை கடந்த வருடம் பரிசாரகர்கள் பயிற்சி நெறி நடத்தப்பட்டு 137 சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு பரிசாரகர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (51)

# யாழ்.பிரதேச செயலக பிரிவில் 11 திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூன்21

யாழ்.பிரதேச செயலக பிரிவில் இவ்வருடத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு சொலவுத் திட்டத்தின் கீழ் 11 வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- யாழ்.தபாற்கந்தோர் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்.
- யாழ்.சமூக அபிவிருத்தி மன்றத்துக்கு தையல் இயந்திரம் வழங்குதல்
- சன்மார்க்க ஐக்கிய இளைஞர் சனசமூக நிலையத்துக்கு கணனித் தொகுதி வழங்குதல்
- சமூக அபிவிருத்தி மன்றத்துக்கு கணனித் தொகுதி வழங்கல்
- திருவருள் சிறுவர் நிலையத்துக்கு சிறுவர் பூங்கா அமைத்தல்
- சுண்டுக்குழி சனசமூக நிலையத்துக்கு தளபாடத் தொகுதி வழங்கல்
- சென்.மேரிஸ் வித்தியாலயத்துக்கு கணனித் தொகுதி வழங்கல்
- முத்தமிழ் பாலர் பாடசாலை புனரமைப்புச் செய்தல்
- பொம்மைவெளி கிராமத்துக்கு மின்சாரம் வழங்கல்
- நித்திய வெளி சனசமூக நிலையம் புனரமைப்பு செய்தல்
- சன்மார்க்க வித்தியாலயத்துக்கு மலசல கூடம் அமைத்தல்

போன்ற செயற்றிட்டங்களே முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (204-190)

# யாழ்.நீதிமன்றத்தில் ஏல விற்பனை!

யாழ்ப்பாணம்,ஜூன்21

யாழ்ப்பாணம் நீதிமன்றில் பறிமுதல் செய்யப்பட்டு இதுவரை உரிமை கோரப்படாத சைக்கிள்கள்,மோட்டார் சைக்கிள்கள், மோட்டார்கள், தையல் இயந்திரங்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை 9 மணிக்கு நீதிமன்ற வளவினுள் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

யாராவது இங்கு குறிக்கப்பட்டுள்ள ஏதாவது பொருள்களை உரிமைகோருமிடத்து, விற்பனை தொடங்குவதற்கு அரைமணித்தியாலத்திற்கு முன் தமது கோரிக்கைகளை சமர்ப்பிக்கலாம்.

பொதுமக்கள் மன்றப்பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரைமணிநேரத்திற்கு முன்பொருள்களைப் பார்வையிடலாம்.

ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருள்களின் மதிப்புவிலை கிடைக்காதவிடத்து, அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும் என்றும்-

விற்கப்படும் பொள்களுக்கான பணத்தை உடன் செலுத்தி பொருள்களை உடனடியாக நீதிமன்ற வளவிலிருந்து அகற்றப்பட வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டுமெனவும் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ரி)

## வாசகர் திருமுகம்

# சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது யார்?

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஆவரங்கால் கிழக்கு மத்தியசுற்றாடல் அதிகார சபையினரின் அனுமதியின்றி சுண்ணாம்புக்கல் உடைக்கும் ஆலை ஒன்று கடந்த பல மாதங்களாக செயற்பட்டு வருகின்றது.

இவ்விடத்தில் குறித்த ஆலை ஆரம்பிக்கப்பட்டால் அதனால் ஏற்படும் பாதிப்புகள் சம்பந்தமாக எமது சனசமூக நிலையமும் மற்றும் கிராமமுன்னேற்றச்சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள், விளையாட்டுக்கழகங்கள் முதலான பொது அமைப்புகளும் ஒன்று சேர்ந்து கூட்டாக யாழ்.மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபைப் பணிப்பாளர், வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர், அரசாங்க அதிபர் உட்பட சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு ஆட்சேபனைகளை தெரிவித்து, மகஜர் சமர்ப்பித்து நேர்முகச் சந்திப்புகள், உரையாடல்களை மேற்கொண்டபோது எமது கோரிக்கை நியாயமானது என ஏற்றுக்கொண்ட அதிகாரிகள் அதன் பின்னர் உரியநடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கவில்லை.

சுன்னாம்புக் கல் உடைக்கும் இடத்தைச் சுற்றி நாலாபக்கமும் உள்ள நெற்காணி, மேட்டுக் காணிகள் கல், மண், தூசி படிவதால் பயிர்ச் செய்கைக்கு ஒவ்வாத நிலங்களாக மாறு கின்றன.

வேளாண்செய் நிலங்களில் வேலை செய்வோர், அயலில் குடியிருப்போர் தூசி படிந்த காற்றைச் சுவாசிப்பதனால் நோய்களுக்கு ஆளாகின்றனர்.

அருகில் 250 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இப் பகுதி குடியிருப்பாளர்களின் ஒரே ஒரு குடிதண்ணீர் கிணறு பாழடைந்துள்ளது.

கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்கள் தூசியினால் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆலைக்கான கட்டடம் அமைக்கவோ அல்லது ஆலை இயங்குவதற்கோ தாங்கள் எதுவித அனுமதியும் வழங்கவில்லை என வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளரும் வட பிராந்திய மத்திய சுற்றாடல் அதிகார சபைப் பணிப்பாளரும் உறுதிபடக்கூறியுள்ளார்கள்.

ஆனபடியால் மேற்கூறிய விடயங்களைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காலம் தாழ்த்தாது ஆலையை அவ்விடத்தில் இருந்து அகற்ற உடன் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*அச்சுவேலி-தெற்கு,* நவோதயா சனசமூக நிலையம்.

# சங்கீதக் கதிரைப் போட்டி போன்று எதிர்பாராத நேரத்தில் மின்வெட்டு

அடிக்கடி மின்தடை ஏற்படுவதும் சில நேரங்களில் மின்வெட்டு ஏற்படுவதும் வழமையான விடயங்களாகிவிட்டன. இவை தவிர்க்க முடியாதன என்று கொள்ளப்பட்டாலும் கூட இவற்றால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் சிரமத்தை குறைப்பதற்காவது சில நடைமுறைகளைக் கையாளலாம் தானே. உதாரணத்திற்கு மின்வெட்டு நேரங்களில் அடிக்கடி, அநேகமாக தினசரி நேர மாற்றங்கள் ஏற்படுகின்றன. எதிர்பாராத நேரங்களில் மின்வெட்டு ஏற்பட்டால் இரவு என்ற காரணத்தால் மக்களுக்கு எவ்வளவு அசௌகரியங்கள் ஏற்படும் என்று விளக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு சீரான முறையில் நேரம் மாற்றப்பட்டாலோ அன்றி ஏதாவது எச்சரிக்கை செய்யப்பட்டாலோ மக்கள் தங்களைத் தயார் படுத்திக்கொள்வார்கள். ஆனால் சங்கீதக் கதிரைப் போட்டிக்கு பாட்டு நிறுத்தப்படுவது போல எதிர்பாராத நேரங்களில் மின்வெட்டை ஏற்படுத்துவதில் மின்சார சபைக்கு உண்டாகும் லாபம் என்ன?

இத்தனைக்கும் மேலாக குறிப்பிட்ட சில இடங்களுக்கு அரிதாக மின்வெட்டு நிகழ்த்துவதும் சில காலங்களில் மின்வெட்டே இல்லாமல் இருப்பதுவும் பலராலும் அறியப்படுகிற ஒரு விஷயம்.

வாடிக்கையாளர்களுக்கும் மின்சார சபைக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதேயொழிய மின்சார சபையின் தயவில் வாடிக்கையாளர்கள் தங்கியிருக்கவில்லையென்ற உண்மையை சம்பந்தப்பட்ட வர்கள் உணர்ந்து கொள்வது நல்லது.

*கொக்குவில் ,* வை.சந்திரபாலன்.

# யாழ்.பல்கலை கிரிக்கெட் சுற்றுப்போட்டி: பற்றீஸியன் வி.கழகம் சம்பியனானது

வலி.வடக்கு,ஜூன்21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு சபை அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

40 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட இந்தப் போட்டியில் முதலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியினர் துடுப்பெடுத்தாடினர்.

இந்த அணியினர் ஆரம்பத்தில் பற்றீசியன் விளையாட்டுக் கழக அணி வீரர்களின் பந்து வீச்சுக்கு முகம்கொடுக்க முடியாது தொடர்ந்து தமது விக்கெட்டுக்களை மளமளவென்று இழந்தனர்.

பற்றீசியன் அணியைச் சேர்ந்த வினோதன், தீபராசன் ஆகியோர் விக்கெட்டுக்களை கைப்பற்றுவதில் ஆதிக்கம் செலுத்தினர்.

ஒரு கட்டத்தில் பல்கலைக்கழக அணியினர் 7 விக்கெட்டுக்களை இழந்து 36 ஓட்டங்களை ம்ட்டும் பெற்றிருந்தனர்.

பல்கலைக்கழக அணித் தலைவர் அருள்ராஜ் தமது விக்கெட்டுக்காக களம் இறங்கி அணியை ஓரளவுக்கு முன்னேற்றிச் சென்றார். இவர் 35 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

ஆனாலும் பல்கலைக்கழக அணியினர் 23.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 91 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டார்கள்.

இதில் அருள்ராஜ் 35, பந்துலன் 16, கோபிநாத் 11 ஓட்டங்களையும் ஆகக் கூடிய ஓட்டங்களாக பெற்றனர்.

பற்றீஸியன் அணி சார்பில் பந்து வீசிய தீபர்ாசன் 6 ஓவர்கள் வீசி ஓர் ஆட்டமற்ற ஓவர்களுடன் 12 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் வினோதன் 8 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

விதுபாலா, சுகீலன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணியினர் 26.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப்பெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதிலும் பல்கலைக்கழக அணி சார்பில் பந்து வீசிய மணிவண்ணன் பற்றீசியன் அணியின் விக்கெட்டுக்களை தொடர்ந்து கைப்பற்றிக்கொண்டே இருந்தார்.

பற்றீசியன் அணி சார்பில் துடுப்பெடுத்தாடிய விதுபாலா 21, சுகீலன்16 ஓட்டங்களை தமது அணிக்காக கூடிய ஓட்டங்களாகப் பெற்றனர்.




பிரதம விருந்தினர் உரையாற்றும் போது..

பல்கலைக்கழக அணியின் சார்பில் பந்து வீசிய மணிவண்ணன் 8 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 12 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் அருள்ராஜ் 8 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 9 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வணிக பீடத் தலைவர் பேராசிரியர் நடராஜசுந்தரம் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக ரஞ்சித் தேவராஜன் (பற்றீசியன்), சிறந்த துடுப்பாட்ட வீரனாக அருள்ராஜ் (பல்கலைக்கழகம்), சிறந்த பந்து வீச்சாளராக மணிவண்ணன் (பல்கலைக்கழகம்), சிறந்த களத்துடுப்பாளர் ஜெனன்ராஜ் (பற்றீசியன்), ஆட்டத் தொடர் நாயகனாக வினோதன் (பற்றீசியன்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (86)



சிறந்த பந்து வீச்சாளருக்கு பரிசில் வழங்கும்போது

# ஆஸி. செல்லும் இலங்கை அணியில் யாழ்.மாணவியும் இடம்பிடித்தார்

யாழ்ப்பாணம்,ஜூன் 21

ஆஸ்திரேலியாவில் பல்வேறு நாடுகள் பங்குபற்றும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளும் இலங்கை அணியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் இடம்பெறுகின்றார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த இராசரத்தினம் மைதிலி என்ற மாணவியே இலங்கை அணிக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

வடக்கு- கிழக்கு பாடசாலைகளில் இருந்து முதன் முதலாகத் தெரிவுசெய்யப்பட்ட ஒரே யொரு மாணவி இவராவார்.

இலங்கை தேசிய மட்டத்திலான 19 வயதுப்பிரிவிற்கான தேசிய வலைப்பந்தாட்ட அணியே ஆஸ்திரேலியா செல்லவுள்ளது.


இப் போட்டியில் பங்குபற்றுவதற்காகக் கொழும்பில் தற்போது நடைபெற்று வரும் பயிற்சி முகாமில் மைதிலி விசேட பயிற்சிகளைப் பெற்றுவருகின்றார்.

இந்த மாணவியுடன் பாடசாலை பயிற்றுவிப்பாளரான ஆசிரியர் திருமதி ஜெயதரன் ஜெயந்தியும் ஆஸ்திரேலியா செல்லவுள்ளார். (86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 ஆம் நாள் நினைவஞ்சலி

மண் மலர்வு
28 . 08 . 1932



விண் உதிர்வு
01 . 06 . 2006

## அமரர் உயர்திரு. இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்

(பிரபல தொழிலதிபரும் - ஆர்.வி.ஜி.பீடி கம்பனி, ஆர்.வி.ஜி.மருந்தக ஸ்தாபகரும்)

ஊர் வாழ உழைத்தீர் ஐயா!
உயர் சேவைச் சிகரம் நீர்
பேர் வாழும்படி வாழ்ந்த
பெருந்தவம் நீர்- பெற்ற எம்மைச்
சீர் காண வைத்துலகில்
சிறப்பீந்த செல்வம் நீர்
பார் துறந்து எங்குற்றீர்.....
பதறுகிறோம் உமை எண்ணி.....!

சுடர் ஒளி விட்டுப் பிரகாசித்த
சுந்தர ஒளி அணைந்தது ஏன்?
வளமிகு மைந்தன் வள்ளலான்
வானுலகம் சென்றது ஏன்?
தொழில் பல கற்று துணிவுடனே
பலருக்கு வேலைவாய்ப்பளித்த பண்பாளனே!
எளிமையின் தோற்றம் உன் பண்பு
ஏழ்மைக்கு உதவுவது உன் அன்பு
கனிவான பேச்சு உ ன் கடமையிலே
கருத்தில் பதியவைத்தாய் ஊழியருக்கே
சில்லென வீசும் தென்றலுடன்.
சீக்கிரம் நீங்கள் வந்திடுங்கள்- உங்களை
தேடியே நிற்கும் உள்ளங்களை
தேற்றிட நீங்கள் வந்திடுவீர்கள்.

ஆர்.வி.ஜி.பீடி நிறுவனம்,
இல.58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (51421) (39-14-17)

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
ஆர்.வி.ஜி.பீடி நிறுவன, ஆர்.வி.ஜி. மருந்தக ஊழியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தோல்வியுற்றதொரு நாடுதானா?

**உலகின் தோல்வியுற்ற நாடுகளின் பட்டியலில் அண்மையில் இலங்கையும் சேர்த்துக்கொள்ளப்பட்டதான பகிரங்க அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து அதுதொடர்பான கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.**

**அந்தவகையில், தோல்வியுற்றநாடு என்ற பதத்தை நீக்கி இயலாத்தனம் மிக்க நாடெனக் கொள்வது பொருத்தமானதெனக் கூறும் பிரபல ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய அதற்கான தமது காரணங்களையும் முன்வைக்கத் தவறவில்லை.**

**11.06.2006 அன்று 'லங்காதீப' இதழில் வெளியான கட்டுரையின் தமிழ் வடிவம் இது.**

**தமிழில்: வீயெஸ்ரி**

நாவல நிஹால் என்பவன் கொழும்பு நகரில் பிரபல்யமான பாதாள உலகக் கோஷ்டியொன்றின் தலைவராவார். கடந்த சில நாள்களுக்கு முன்னர் வழக்கொன்று தொடர்பாக நீதிமன்றத்துக்குச் சென்றுவிட்டுத் தனது பாதுகாப்பு உதவியாளர்களுடன் வீடு திரும்பிக்கொண்டிருந்த அவன்பட்டப்பகலில் பிரதான வீதியொன்றில் வைத்து மற்றொரு குழுவினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளான். அவனுக்கு என்ன நடந்ததென்ற எந்தவித தகவலையும் இதுவரையிலும் அவனது குடும்பத்தவர்களால் தெரிந்துகொள்ள இயலவில்லை.



சிலமாதங்களுக்கு முன்னர் தெஹியோவிட்ட பிரதேசத்திலிருந்து ஐந்து தலையில்லாத முண்டங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றில் இரண்டு சடலங்களே உறவினர்களால் அடையாளம் காணப்பட்டன. ஆனால், அந்த உடல்களின் தலைகள் எவராலும் எங்கும் இதுவரை கண்டுபடிக்கப்படவில்லை.

கடந்த வாரத்தில் மட்டும் நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 50பேர் வரையானோர் உயிரிழந்துள்ளனர். நாளொன்றுக்குச் சராசரி ஆறேழு பேர் உயிரிழக்க நேர்ந்துள்ளது. ஒரு நாட்டில் நாளொன்றுக்கு ஐந்துபேருக்கு மேலான இறப்புகள் நிகழுமாயின் அந்நாட்டில் யுத்தம் இடம்பெறுவதாகவே கருதப்படவேண்டும் என்பது உலகம் ஏற்றுக்கொண்டுள்ள பொதுவிதி.

ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற மனிதப் படுகொலைச் சம்பவத்தின் பின்னர் அங்குள்ள பொதுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு அவசியமான ஆளணி வசதி தம்மிடம் கிடையாதென பாதுகாப்புப் படைப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர் என்ற பேதமின்றி யுத்தப் பிரதேசத்தில் இன்று வாழ்ந்து வரும் சகல பொதுமக்களுக்கும் அவசியமான பாதுகாப்புக் கிடைக்காத நிலை இருக்கிறது என்பதே யதார்த்தமாகும்.

கடந்த ஐந்து ஆண்டுகால இடைவெளிக்குள் அரசு சார்பாக இடம்பெற்ற ஆயுதக் கொள்வனவு குறித்து எழுந்த பல தரப்பட்ட விமர்சனங்களை அடுத்து அத்தகைய ஆயுதக் கொள்வனவுப் பேரத்தில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளனவா? அவ்விதம் ஊழல்கள் இடம்பெற்றிருந்தால் அதில் சம்பந்தப்பட்டுள்ள அரச உயர் மட்டப் பிரமுகர்கள் யார்? இவை குறித்து விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி விசாரணைக் குழுவொன்றினை நியமித்துள்ளார்.

பெறுமதிசேர்வரி மீளளிப்பு விடயத்தில் பலகோடி ரூபாய்கள் மோசடி இடம்பெற்றுள்ளதான தகவல் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இந்த மோசடி தொடர்பாக கடந்த காலத்தில் ஊடகங்களினால் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டு வந்தபோதிலும் காலச் சுழலால் மண்ணுள் புதைக்கப்பட்ட, மூடி மறைக்கப்பட்ட அத்தகைய பாரிய அளவிலான நிதி மோசடி நாட்டுக்கு எந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தவல்லது என்பது குறித்து நாம் ஒருகணம் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும். இன்று இந்த நாட்டில் ஊழலும் மோசடியும் சகல துறைகளிலும் விரவிப் பற்றிப் பெருகிக் காணப்படுவதை நாட்டில் அறியாதோர் எவருமில்லை.

நாட்டின் பஸ் போக்குவரத்துச் சேவை மாபியா போதைப் பொருள் போன்று ஆகியுள்ளது. பஸ் போக்குவரத்துச் சேவையை உரியமுறையில் கட்டுப்படுத்திப் பொதுமக்களுக்கான சிறந்தசேவையை வழங்க இதுவரை எந்தவொரு போக்குவரத்து அமைச்சராலும் இயலவில்லை. அதேபோன்று நாட்டின் கல்வித்துறையில் சிக்கலும் குழப்பமும் நிறைந்து காணப்படுகின்றன. உயர் கல்வித்துறைக்குச் சமமான பல்கலைக்கழகக் கல்வி முன்னெப்போதையும் விட பலவீன நிலையை அடைந்துள்ளது. அரச மருத்துவமனைகளின் செயல்திறன் குன்றி, தனியார் மருத்துவ மனைகளின் பிரபல்யம் அதிகரித்து வருகின்றது.



இத்தகைய தனியார் மருத்துவமனைகள் நோய் தீர்க்கும் நிலையங்களாகவன்றி, மருந்துகள் விற்பனையை முன்னிலைப்படுத்துவனவாகவே அமைகின்றன. பொதுமக்களது நாளாந்த வாழ்க்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்துவனவாக இவை அமைகின்றன. இவை நாட்டின் எதிர்காலத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தாதிருப்பதற்கான எந்தவொரு திட்டத்தையும் அரசு கொண்டிருக்கவில்லை.

அரசமைப்பின் 17ஆவது சரத்தைத் திருத்துவதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், தற்போது அதற்கு என்ன நடந்துள்ளது? அது ஏற்கனவே அரசமைப்பில் இடம்பெற்றிருக்குமொன்றே. ஆனால், அது நடைமுறைப் படுத்தப்படாது குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டிருந்தது. அந்த அரசமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டிய அரசமைப்புச் சபையொன்றினை நிறுவுவதற்கு எந்தவித முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதாகத் தோன்றவில்லை.

இலங்கையை தோல்வியுற்ற நாடுகளின் பட்டியலில் சேர்த்துக்கொண்டதான அறிவிப்பு பகிரங்கமாக வெளியிடப்பட்டதன் காரணமாக உருவான வாதவிவாதங்களை நாம் மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில் வைத்தே பரிசீலிப்பது நியாயமானதாக அமையும். இவ்விதம் இலங்கையைத் தோல்வியுற்ற நாடுகளின் பட்டியலில் சேர்த்துக்கொண்டதன் அடிப்படைக் காரணம் ஐ.நா.சபை இலங்கை விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்கும் நோக்கத்தின் ஆரம்பப் படியே என அதுகுறித்து விமர்சிக்கமுயலும் தரப்பினர் குறிப்பாக ஜே.வி.பியினர் கருதுகின்றனர்.

இலங்கை தேசிய அரசென்ற ரீதியில் தோல்வி கண்டிருப்பதாக இதுகுறித்து விமர்சிக்கமுயலும் மற்றொரு தரப்பினர் - குறிப்பாகப் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட உட்பட்ட புத்திஜீவிகள் கருதுகின்றனர். இது விடயத்தில் தோல்வியுற்ற - என்ற சொல்லுக்குப் பதிலாக இயலாத்தனம் மிக்க என்ற சொல்லே மிகவும் பொருத்தமானதென்பது பேராசிரியர் ஜயதேவ உயன்கொடையின் நிலைப்பாடாகும். பிரபல ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் உட்பட்ட மற்றுமொரு தரப்பினர் நீண்டகாலத்துக்கு முன்பிருந்தே இலங்கை ஒரு தோல்வியுற்ற நாடு என்ற கருத்தை வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

இது சமாதானத்தை உருவாக்கும் அடிப்படையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த அணுகுமுறையெனத் தர்க்கிக்கப்படுமாயின், அது யுத்தமொன்றைத் தவிர்ப்பதற்காகவும் யுத்தத்துக்கு அடிப்படையான காரணங்களை வெளிப்படுத்துவதற்கான முயற்சியாகவும் கொள்ளத்தக்கதே. இத்தகைய தோற்றத்தைப் பயன்படுத்தி உலகம் பூராவும் அதனை நிலைநிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்துமாறு வேண்டப்பட்டுள்ளது.

நாம் வாழும் இந்த நாடு தோல்வியுற்ற நாடா? அல்லது வெற்றிபெற்ற நாடா? என்பது தொடர்பாகச் சமாதானத்தை முன்னிறுத்தும் அணுகுமுறை வெளிப்பாடு எவ்வாறமைந்த போதிலும் அது தொடர்பாக இந்நாட்டின் குடிமக்கள் என்ற வகையில் தீர்மானமொன்றை மேற்கொள்வது எமக்குச் சிரமமானதொன்றல்ல. தேர்தல் சமயங்களில் அரசியல் தலைவர்களது மேடைப் பேச்சுகளை நாம் சகலரும் செவிமடுத்துள்ளோம். அவற்றின் அடிப்படையிலும் நமது நிதர்சன வாழ்க்கையின் அடிப்படையிலும் நின்று நோக்குமிடத்து எமது நாடு உரிய வகையில் இயங்க இயலாதிருந்தது என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி எம்மால் தீர்மானிக்கமுடியும்.

அரசியல் கட்சிகள் வாக்குகளைத் திரட்டிக்கொள்ளும் நோக்கில் தேர்தல் சமயங்களில் போது மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளைக் கொண்டு நோக்குமிடத்து இலங்கை ஓர் இயலாத்தனம் மிக்க நாடென்பதை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

இயலாத்தனம் கொண்ட நாடு மற்றும் இயலாத்தனம் மிக்க அரசு என்ற வார்த்தைகளுக்கிடையே பெரும் வேறுபாடு உண்டெனக் கொள்ள இயலாது. இயலாத்தனம் கொண்ட நாடு என்ற பதத்தால் அந்தவேளையில் பதவியிலுள்ள அரசின் விசேட இயலாத்தனத்தை சுட்டிக்காட்டாது ஒட்டுமொத்தத்தில் இந்த நாட்டின் பொது இயக்கம் இயலாத்தனம் மிக்கதாய் அமைந்துள்ளதென்பதை வெளிப்படுத்துவதாகக் கொள்ள இயலும். நாடு முகம்கொடுக்கநேர்ந்த, முகம்கொடுக்கநேரும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வைக் காண்பதற்காகவே நாம் எமது நாடு இயலாத்தனம் கொண்டுள்ளதா? அல்லது எம்மால் இயலுமா? என வினாவெழுப்புதல் பொருத்தமாய் அமையும். அதைவிடுத்து மற்றொருவர் மீது குற்றம்சுமத்திக் குறைகூறுதல் இதற்கான தீர்வாக அமையாது.

பொதுமக்கள் மற்றும் சமூகக் குழுக்கள் என்பவை எதிர்நோக்கும் தீர்க்கப்படாத சிரமங்கள் தொடர்வது அத்தகைய கருத்து நிலைப்பாட்டை சம்பந்தப்பட்ட சமூகக்குழுக்கள் ஏற்றுக்கொள்ளும் நிலை என்ற பிரிவுகளின் அடிப்படையிலேயே நாம் சமாதானத்தை ஏற்படுத்தல் என்ற கருத்து நிலைப்பாடு தொடர்பாகப் பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளோம். நிர்வாகத்தை மேற்கொள்ள அதிகாரம் வாய்த்தோர் கருத்துவேறுபாடுகள் கொண்ட குழுக்களாகப் பிரிந்துசெயற்படுவதும் நாம் எதிர்நோக்கும் அடுத்தடுத்தொரு பின்னடைவாக அமைகின்றது. அந்தவகையில் தேசிய ரீதியில் இணக்கப்பாடொன்று நிலவ வாய்ப்பற்றுப் போகின்றது. அதுமட்டுமன்றி, அரசினுள் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளில் இறுக்கமான கட்டுப்பாடும் ஒன்றிணைப்பு நிலவாமையும் பின்னடைவுக்கான மற்றொரு காரணமாகிறது.

அவற்றுடன், அரசு நீதித்துறைக் கட்டுப்பாடுகளிலிருந்து சிலசமயங்களில் விலகிச் செயற்படுவதும் சமூகங்கள் மத்தியில் பொருத்தமற்ற பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த முயல்வதும் அரசுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் காரணிகளாக அமைகின்றன.

எவர் கூறினாலும் சரி, கூறாவிட்டாலும் சரி மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் எமது நாடு தனது இயலாத்தனத்தை வெளிப்படுத்தி நிற்கிறது என்பது சந்தேகத்துக்கு இடமானதொன்றல்ல. 1959 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பண்டாரநாயக்க -செல்வநாயகம் ஒப்பந்தம் தொடக்கம் 2000 ஆம் ஆண்டில் ஜனாதிபதி சந்திரிகாவினால் முன்வைக்கப்பட்ட புதிய அரசமைப்பு ஒன்றுக்கான சட்டமூலம் ஈறாக, நாட்டுமக்களது தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கான முயற்சிகள் யாவற்றுக்கும் என்ன பயன் கிடைத்தன என்பதை நாமறிவோம். இடம்பெற்ற இனக்கலவரங்கள் இந்த நாட்டின் வரலாற்றில் மட்டுமன்றி இன்றைய நிகழ்காலத்தினது பகுதியுமாகும்.

அரசு, நீதித்துறை கட்டுப்பாடுகளினின்றும் கீழிறங்கிச் செயற்படுவதற்கான உதாரணமாக அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தை அசட்டை செய்தமையைக் குறிப்பிடலாம். சுயாதீன ஆணைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் ஜனாதிபதியால் தன்னிச்சையாக நியமிக்கப்படும் சம்பவங்கள் அவை. இந்த நாட்டின் அரசு இயலாத்தனம் கொண்டியங்குவதாக நம்பியதன் அடிப்படையிலேயே ஜே.வி.பியினர் 1971 ஆம் ஆண்டில் அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியொன்றில் ஈடுபட முனைந்தனர். அதேபோன்று 1988-2000 ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் அரசு இயலாத்தனத்துடன் இயங்குவதாக நம்பியதன் காரணமாகவே ஆயுதக்குழுக்கள் நாட்டில் உருவாகநேர்ந்தது. அதேவிதத்தில் அரசு இயலாத்தனம் கொண்டியங்குவதான நம்பிக்கையின் அடிப்படையிலேயே உமாமகேஸ்வரன் முதல் பிரபாகரன் வரையானோர் ஆயுதப் போராட்டக் குழுக்களை நாட்டில் உருவாக்கினர்.

நாட்டின் இயலாத்தன்மை ஆபத்தான விதத்தில் உருவெடுத்து சகல சாதகமான செயற்பாடுகளையும் தோல்வியுறச் செய்து முன்னோக்கிச் செல்கிறது. இந்த யதார்த்தத்தை எம்மால் உணர்ந்துகொள்ள இயலாது போகுமானால் நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்கு எம்மால் ஒருபோதும் தீர்வுகண்டிட இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

# Computer Hardware Engineering Course

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதளைப் பெற

உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

◆Assembling ◆Upgrading ◆Troubleshooting ◆Fault Finding ◆Repairing ◆Servicing ◆Software Installation ◆Configuring ◆Introduction to Networking

*Course Contents*

- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- Internet & e-mail
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம் (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software, Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Drivers CD
வகுப்புக்கள் ஆரம்பம்:-
*12/06/2006:- 08.30*

*Hard ware பயிற்சி*

- கணனிப் பாகங்களை இனம்காணும் முறை
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Network தொடர்பான அறிமுகம்
- Troubule Shooting / Maintenance.

*Software பயிற்சி*

- Operating System நிறுவும் முறை (Windows 98 / Windows XP)
- Software Install செய்யும் முறை
- Driver Installation செய்யும் முறை (Sound Card, Modam, VGA, TV Card, Printer)
- Troubule Shooting (File updating, Copying)

நன்மைகள்

- பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் காட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- PI முதல் P4 வரையிலான கம்யூட்டர்களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirampiyadi lane, Jaffna.
Telephone :- 021-2228250, 0777-222422

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்


ஓம்
ஸ்ரீராம ஜெயம்

யாழ்ப்பாணம் - வண்ணை

## ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

ஏகாதசி உற்வசம் - 21-06-2006
நிகழும் விய வருடம் ஆனி மாதம் 07 ஆம் திகதி
முற்பகல் 10.30 மணிக்கு
ஏகாதசி உற்சவம் நடைபெறும்.
அடியார்கள் இவ்வுற்சவத்தில் பங்கு பற்றி
ஸ்ரீமந் நாராயணன் அருள்பெற்று ஸ்ரீமகாலக்ஷ்மி
விலாச சம்பன்னாக வாழ்வீர்களாக.

(சி/48978)(26.19.15) - ஆதீன மகாசபை.


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane, Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2006
A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

80% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 750/= Duration :- 3 Months | Diploma in Desktop Publishing ~~6000/=~~ 1200/= Duration :- 4 Months | Diploma in Web page Designing ~~7000/=~~ 1400/= Duration :- 4 Months |
| Diploma in Graphic Designing ~~7000/=~~ 1400/= Duration :- 4 Months | Diploma in Hardware Engineering ~~6000/=~~ 1200/= Duration :- 3 Months | Accounting Package ~~7000/=~~ 1400/= Duration :- 3 Months |
| Diploma in Computer Science ~~7000/=~~ 1400/= Duration :- 4 Months | Honors Diploma in Computer Science ~~9000/=~~ 1800/= Duration :- 5 Months | Diploma in Auto CAD ~~6000/=~~ 1200/= Duration :- 3 Months |

Advances Courses
50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

July 15ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்

வகுப்புகள் ஆரம்பம்
Batch I - 16/06/2006
Batch II - 17/06/2006
Batch III - 18/06/2006
Batch IV - 19/06/2006


## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

நாளை (22-06-2006)
வியாழக்கிழமை எமது
குடும்பத்தின் குலவிளக்கு
அமரர்

### திருமேனி பஞ்சாட்சரம்

திதி: 22-06-2006

அவர்களின் 31 ஆம் நாள் நினைவை முன்னிட்டு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மணற்பகுதி, புத்தூர். -குடும்பத்தினர்.
(51431)(26.19.15)




A/L கடினம்!
பல்கலை அனுமதி மிகக்கடினம்!!
தொழில்வாய்ப்பு மிகமிகக்கடினம்!!!
இதனால் எனது எதிர்காலம்????
என நீங்கள் நினைக்கலாம்

ஆனால் NIIT
எனது எதிர்காலத்தை வழமாக்குகின்றது.

"I wish.

NIIT ல் இரு வருட கற்கையை பூர்த்தி செய்த மாணவர்கள் NIIT உடன் இணைந்துள்ள பின்வரும் பல்கலைக்கழகங்களில் மிகக் குறகிய காலத்தில் பட்டதாரியாகிட வாய்ப்பு!!!

| | |
|---|---|
| **Australia** | :- University of Canbera, RMIT, University of Southern Australia |
| **U.K** | :- University of Sunderland, University of Northumbriya, Bolton Institute |
| **Canada** | :- University of Winnipeg |
| **U.S.A** | :- Southern New Hampshire University |
| **Newzealand** | :-Auckland Institute of Studies |
| **Ireland** | :- Dundalk Institue of Technology |

**The NIIT EDGE**

- MicroSoft, IBM, Oracle, Computer Association, Citrix போன்றவற்றுடனான இணைப்பு.
- ஆசியாவின் No 1 IT பயிற்சி நிறுவனம்.
- ISO 9001 இனால் அங்கீகரிக்கப்பட்ட இலவச பாட நூல்கள்.
- ஆசியாவில் MicroSoft இன் மிகச் சிறந்த பயிற்சி நிறுவனம்.
- உலகின் முதல் 12 IT நிறுவனங்களில் ஒன்று.
- சர்வதேச சான்றிதழ்கள்.
- தொழில் வாய்ப்பிற்கான சேவை.

**A Degree from a Leading University**
↑ 1 Year
**e-Technology Software Engineer**
↑ 1 Year
**Object Oriented Application Programmer**
↑ 6 Months
**Web Programmer**
↑ 6 Months
**After O/Ls or A/Ls**

87 நாடுகளில் 3800க்கும் மேற்பட்ட எமது கிளைகளிலுள்ள 2.5 மில்லியன் மாணவருடன் நீங்களும் இணையுங்கள்

**NIIT**
GLOBAL LEADERS IN IT EDUCATION AND TRAINING
347, Kasthuriyar Road, Jaffna. T.P 021 222 7250


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 02 - 05 - 1924 | மறைவு 21 - 06 - 2005

திருமதி

### சவீனம்மா அரியகுட்டி

(வெள்ளவத்தை கிறவுண் சலூன் உரிமையாளரின் மனைவி)

ஓராண்டு கழிந்துவிட்டதே!
எம் குல விளக்காய் எமக்கெல்லாம்
நல்வாழ்வும் வளமும் அளித்த
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆறாத் துயரில் துடிக்கிறோம்
எம்மால் உமை மறக்கமுடியாது
உங்கள் நீங்காத நினைவுகளுடன்
என்றென்றும் வாழ்கின்றோம் - அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

உடும்பிராய் தெற்கு,
உடும்பிராய். (51422)(26.19.15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இராமநாதபுரம் மாவடிமாரி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலையின் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் பாடசாலைக் கட்டடத்தை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் தவத்திரு கணேசானந்தா மகாதேவா சுவாமிகள் பாடசாலை அலுவலக அறையைத் திறந்து வைப்பதையும் முதலிரு படங்களிலும் -அறநெறிப் பாடசாலை அதிபரும் மாரி அம்மன் ஆலய ஓதுவாருமாகிய வியாக்கிரமபாதர் கிளிநொச்சி அரச அதிபரால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவதையும் அறநெறிப் பாடசாலை மாணவர்களில் ஒருபகுதியினரையும் ஏனைய படங்களில் காணலாம். (படங்கள்: வட்டக்கச்சி செய்தியாளர்)

# கமக்கார அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறு விவசாயிகளுக்கு பொருண்மியம் அறிவுறுத்து

பரந்தன் ஜூன் 21

கமக்கார அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது

இலங்கை அரசால் தமிழர் தாயக மண்ணில் திணிக்கப்பட்ட பொருளாதாரத் தடையின் போது விவசாயிகளுக்கான உள்ளீட்டுப் பொருள்களை விநியோகிப்பதற்காக 1990ஆம் ஆண்டுகாலப்பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கமக்கார அறிமுக அட்டை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்மூலமாகவே விவசாயிகள் தமக்கான உள்ளீட்டுப் பொருள்களை பெற்றுக்கொண்டார்கள்

பின்னர் ஏற்பட்ட தற்காலிக சமாதான காலத்தில் கமக்கார அறிமுக அட்டை நடைமுறை தற்காலிகமாகத் தளர்த்தப்பட்டிருந்தது. ஆனால் மீண்டும் அரசால் மட்டுப்படுத்தப்பட்டளவு பொருளாதாரத்தடை திணிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் விவசாயிகளுக்கான உள்ளீடுகள் யாவும் கமக்கார அட்டை ஊடாகவே விநியோகிக்கப்படவுள்ளன.

ஆகவே முன்பு கமக்கார அறிமுக அட்டை பெற்றுக்கொள்ளாத விவசாயிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகங்களிலோ கமக்கார அமைப்புகளிலோ அல்லது பசுமை வேளான் சேவை நிலையங்களிலோ தொடர்புகொண்டு அதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து புதிய கமக்கார அட்டையினைப் பெற்றுக் கொள்ளுமாறும் பழைய கமக்கார அட்டை வைத்திருப்பவர்கள் அதனைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர். (352)

# தகவல் தொழில்நுட்பச் சான்றிதழ் கற்கை நெறி

வட்டக்கச்சி, ஜூன்21

கிளிநொச்சி இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையால் தகவல் தொழில்நுட்பத் தேசிய சான்றிதழ் கற்கைநெறி நடத்தப்படவுள்ளது.

இக்கற்கை நெறியைத் தொடரவிரும்புவோர் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக 'மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (405)

# கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தெரிவு

விவேகானந்தநகர் கிராமத்தில் இரு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விவேகானந்த நகர் கிராம சேவை அலுவலர் க.வைரவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விவேகானந்த நகர் கிழக்கு, மேற்கு என இரு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு அதற்கான நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

விவேகானந்தபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக க.தியாகராஜாவும், செயலாளராக அ.சக்திவேலும், பொருளாளராக பு.கந்தசாமியும்- விவேகானந்தபுரம் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக கி.பாக்கியநாதனும், செயலாளராக சி.நடராசாவும் பொருளாளராக கே.மகேந்திரனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (405)

# பொங்கல் நிகழ்வில் திருட்டு; நான்கு பெண்கள் கைது!

பளை கிரியாய் அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வின்போது திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் நான்கு பெண்களை பளை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் நான்கு பேரும் இரண்டு மணித்தியால இடைவெளியில் பதினொரு இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைப் பக்தர்களிடம் களவாடியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 9ஆம் திகதி இரவு இடம்பெற்றது.

பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களின் சனநெரிசலைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட திருடர்கள் இவ்வாறு தங்க நகைகளைத் திருடியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:-

பொங்கல் நிகழ்விற்கு வந்திருந்த குழந்தைகள் அணிந்திருந்த நகைகளை காணவில்லையென அவர்களின் பெற்றோர் காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து காவல்துறையினர் உடனடியாக விசாரணைகளில் ஈடுபட்டனர்.

இவர்களின் விசாரணைகளையடுத்து இரண்டு இளம் பெண்களும், 45 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரும், இரண்டு மாதக் கைக்குழந்தையுடன் இன்னொரு பெண்ணும் காவல் துறையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் காவல்துறையினர் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தியபோது அவர்களிடம் மறைத்து வைக்கப்பட்டிருந்த நகைகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட நகைகளில் மூவருடைய நகைகள் இனங் காணப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறும் பளை காவல் பணிமனைப் பொறுப்பாளர் இராமகேந்தி தெரிவித்துள்ளார். (352)

# முல்லைத்தீவில் நிகொட் நிதியுதவியுடன் சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டன

புதுக்குடியிருப்பு,ஜூன்21

முல்லைத்தீவில் நிகொட் நிறுவனத்தினர் காப் திட்டத்தின் கீழ் 32 சூரிய மின்கலத் தொகுதிகளை வழங்கியுள்ளனர்.

22 பாடசாலைகள், மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஏழு கிராம அபிவிருத்தி நிலையங்கள் ஆகியவற்றுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன.

மாங்குளம் ம.வி., ஒட்டுசுட்டான் ம.வி., யோகபுரம் ம.வி., பாண்டியன்குளம் ம.வி., மல்லாவி மத்திய கல்லூரி, முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க., பாலிநகர் ம.வி., பாரதி வித்தியாலயம், செம்மலை ம.வி., இரணைப்பாலை ம.வி., குமுளமுனை ம.வி., வற்றாப்பளை ம.வி., விசுவமடு ம.வி, உடையார்கட்டு ம.வி., அம்பலவன் பொக்கணை ம.வி., கலைமகள் வித்தியாலயம், அளம்பில் றோ.க.வி., கற்சிலைமடு அ.த.க., விக்கினேஸ்வரா வித்தியாலயம், முத்துஐயன்கட்டு வலது கரை அ.த.க., வள்ளிபுனம் க.உ.பாடசாலை ஆகியவற்றுக்கும்-

பூவரசன்குளம், பெரியகுளம், நாயாறு, குரவில் ஆகியன கிராம அபிவிருத்தி நிலையங்களுக்கும்-

குமுளமுனை, விசுவமடு, கறிப்பட்டமுறிப்பு ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குமே இந்த சூரியமின்கலத் தொகுதிகள் வழங்கப்பட்டன.

இக்கிராமங்கள் மின்சாரம் என்றால் என்னவென்று தெரியாத நிலையிலேயே உள்ளன.

இந்த சூரிய மின்கலத் தொகுதிகள் வழங்கப்பட்டதால் இக் கிராம மக்கள் ஓரளவு பயனடைய முடியுமென்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை- இன்னும் எத்தனையோ கிராமங்கள் இவ்வாறு மின்சாரமின்றி இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன. (353)

# வன்னிச் செய்திகள்

கிளிநொச்சி

முல்

# ஆண், பெண் சமத்துவத்தைப் பேணுவதற்கு கிராமங்களில் பால்நிலைக் கருத்தரங்குகள்

கிளிநொச்சி உருத்திரபுர கிராமத்தில் பால்நிலை சமத்துவக் கருத்தரங்குகளுக்கான முன்னேற்பாட்டு நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் திருமதி கே.தேவிகா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன ஒருங்கமைப்பின் கீழ், மிகவும் பின் தங்கிய கிராமங்களில் ஆண், பெண் இருபாலாருக்குமிடையே ஏற்படும் கருத்து முரண்பாடுகளை இனங்கண்டு பரஸ்பர புரிந்துணர்வுடன் கூடிய நல்லுறவை அவர்களிடையே பேணி வளர்க்கும் நோக்குடன் இக்கருத்தரங்கு கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் உருத்திரபுரம் கிராமத்தில் பால்நிலை சமத்துவக் கருத்தமர்வினை மேற்கொள்ளும் முன்னேற்பாட்டு நிகழ்வின் போது மக்களிடையே குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் ஒக்ஸ்பாம் நிறுவன பால்நிலை சமத்துவத்திட்ட அலுவலர் இ.சமந்தா, ஊரக மேம்பாட்டு பேரவை உறுப்பினர்கள், கிராம மாதர் சங்க உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்

இதேவேளை - உமையாள்புரம் கிராமத்திலும் இக்கருத்தமர்வுக்கான முன்னேற்பாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன. (405-352)

# பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்த சுயதொழில் ஊக்குவிப்பு உதவிகள்

புதுக்குடியிருப்பு,ஜூன்21

முல்லைத்தீவு மாவட்டப் பசுமைப் புரட்சிக்கான நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 30 குடும்பங்களுக்கு வளர்ப்புக் கோழிகளும், கோழிகளுக்கு ஒரு மாத காலத்திற்குத் தேவையான கோழித் தீனும் வழங்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் வித்யாபுரத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 பயனாளிகளுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் இவை வழங்கப்பட்டுள்ளதுடன் கோழிவளர்ப்பு, பாராமரிப்பு தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்து அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (353)

# நிறுவனங்களின் பெண் பணியாளருக்கு கிளிநொச்சியில் வலுவூட்டல் பயிற்சி

வட்டக்கச்சி,ஜூன் 21

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் நிறுவனங்களில் பணியாற்றும் பெண்களுக்கான வலுவூட்டல் பயிற்சியின் ஆரம்ப விழா கடந்த 5ஆம் திகதி கிளிநொச்சி நியாப் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக அபிவிருத்தி அலுவலர் எஸ்.விமலகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பயிற்சியை ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு சமூக நலன் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் வி.எஸ்.சுவாமிநாதன் பயிற்சிகளை வழங்கினார்.

மகளிர் சமூகப் பொறுப்பு மற்றும் அபிவிருத்தி என்பவை இதில் பயிற்றுவிக்கப்பட்டன.

கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த நிறுவனங்களில் பணியாற்றும் பெண்கள் இப் பயிற்சியில் பங்கேற்றனர். (405)

# தண்ணீர்முறிப்பில் முன்பள்ளி

புதுக்குடியிருப்பு,ஜூன்21

தண்ணீர்முறிப்புக் கிராம சிறார்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அக்கிராமத்தில் முன்பள்ளி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இக்கிராமத்திற்கென ஒரு முன்பள்ளி இல்லாமையினால் பல கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் சென்று பெரும் சிரமத்திற்கு மத்தியில் சிறார்களுக்கு கல்வி வழங்க வேண்டிய நிலையில் அவர்களின் பெற்றோர் உள்ளனர்.

அதிகதூரம் செல்லவேண்டியதன் காரணமாக சில சிறார்கள் பாடசாலைக்கு செல்லாமலேயே உள்ளனர்.

இக்கிராமத்தின் சிறார்கள் இது போன்று இன்னும் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனவும்-

அவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக இக்கிராமத்தில் ஒருமுன்பள்ளி அமைக்கப்படவேண்டும் என்றும் கரைதுறைப்பற்று விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளையிடம் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அவர்களது வேண்டுகோளையடுத்து இந்த முன்பள்ளி அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இக்கிராமத்தில் பொதுக்கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. (353)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி விற்பனைக்கு

கொம்மாந்தறை, கம்பர்மலை கலவன் பாடசாலைக்கு அருகில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779906372, 0777667648 (51436)

## தவறிவிட்டது

றமீன் அமலநாயகி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (555933576V), விசேட அடையாள அட்டை (0901005677) என்பன பாஷையூர் அந்தோனியார் கோயிலடியில் 13.06.2006 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 40/5, **A.V.** றோட், கொழும்புத்துறை, தகுந்த சன்மானம் வழங்கப்படும். (51434)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima** உயிர் **Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். **(Electronic** நிறுவை) நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/49764)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 21.06.2006 மாலை விநியோகிக்கப்படும். தொடர்பு: றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, ரவி - சாவகச்சேரி, தாரகை - பருத்தித்துறை, றாஜீ ஸ்ரோர்ஸ் - பிரதான வீதி, நெல்லியடி, சுன்னாகம் உடுவில், கோப்பாய், கோண்டாவில், வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் ஆகிய கால்நடைச் சங்கங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். **T.P.:** 222 2867, 222 3529 (51099)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 03.07.2006 திங்கட் கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, கரன் ஆலடி - உடுவில், ஐங்கரன் களஞ்சியம், - திருநெல்வேலி, நல்லூர் பாம் சென்ரர் இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-49763)

## தையல் கடை வாடகைக்கு

K.K.S. வீதி, தாவடி கொக்குவிலில் கடந்த 12 வருடங்களாக இயங்கும் இத் தொழில் ஸ்தாபனம் வாடகைக்குண்டு. இங்கு தையல் மெசின் (யூக்கி, டபிள்சிங்கர் CD க்கள், கொம்பியூட்டர், துணிப்பீஸ் மற்றும் கண்ணாடிப் பிற்றிங் செய்த குளிரூட்டப்பட்ட (A/C) வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தொடர்பு: T.P. 021 222 3092. (51446)

## வாடகைக்கு

யாழ்.கச்சேரிக்கு அண்மையில் கண்டி வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 222 7861. (51425)

## வீடமைப்புத் திட்ட பயனாளிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்21

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் முதற்கட்டமாக 31 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜே/71, ஜே/74, ஜே/81, ஜே/84, ஆகிய நான்கு கிராம சேவகர் பிரிவுகளிலுமே மேற்படி பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் (ரி)


வசீகர தோற்றத்திற்கு

**சந்தனாலேப**

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப் பட்டை,

கஸ்தூரி, மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔதங்களின் கலவை. தேமல், முகப்பரு, நரம்புகள், பாரதாமரை, கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும்.

சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் எரிச்சலை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.




*யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்*

**'சிவா நறுமணப் பூங்கா'**

*288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

T.Phone: *222 2567*

*சகல பார்மஸிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.*

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA SRI LANKA AYY PRO NO: REGNO A/L 250


## கண்ணீர் அஞ்சலி

தேசிய நீர் வழங்கல் சக வடிகால் அமைப்புச் சபையில் கடமையாற்றும் எமது சக ஊழியர் அருணாச்சலம் கந்தசாமி அவர்களின் தாய்

**வள்ளிப்பிள்ளை**

அவர்கள் சிவபதம் அடைந்த செய்தியைக் கேட்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை,
வடபிராந்திய தொழிற் சங்கம், யாழ்ப்பாணம்.

(51447) (21.11.15)

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 23 - 12 - 1949



விண்ணில் 17 - 06 - 2001

**திருமதி ஜெயராசா நாகேஸ்வரி**

(பாலாமணி)

*திதி: 21.06.2006 (ஏகாதசி)*

சின்னவயது சிருஷ்டிகள் வளர்ந்த பின்னும்
உணர்வின்றி உறங்குகின்றாய்
உறக்கம் மறந்து - எம்மை
உணர்விழக்கச் செய்து விட்டாய்.

25/1, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

(51445)(21.11.15)


யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக
மின்சார மோட்டார் சைக்கிள்
**ELECTRIC BIKE**

- அதிசிக்கனமானதும், பாதுகாப்பானதும்
- ஒரு கிலோமீற்றர் ஓடும் செலவு 13 சதம் மட்டுமே
- வாகன அனுமதிப் பத்திரமோ சாரதி அனுமதிப்பத்திரமோ தேவை இல்லை.
- காப்புறுதி தேவை இல்லை
- தலைக்கவசம் தேவை இல்லை
- வாகனப் பதிவுசெய்யவேண்டியதில்லை
- பராமரித்தலோ (SERVICING) ஒயில் மாற்றவோ தேவை இல்லை
- 14 வருடங்களுக்கு மேலாகப் பாவிக்கக்கூடியதாக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது
- எரிபொருள் தேவை இல்லை
- உதிரிப்பாகங்கள் உண்டு.

நாடவேண்டிய இடம்:

**பிள்ளையார் இன்,**

*(சன்டெல் காரியாலயம்),*
*31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.*
*021 222 2829*

(51448)(21.11.15)


# 31 ஆம் நாள் நினைவலையும்... அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் பொன்னுத்துரை முரளீதரன் (பபா)

அன்னை மடியினில் மகவாக **03.09.1953**

ஆண்டவன் அடியினில் மலராக **22.05.2006**

அன்றிற்கோர் உறைவிடமாய்!
பாசத்தின் இருப்பிடமாய்!!
குடும்பத்தின் ஒளி விளக்காய்- இருந்தீரே
இன்முகத்தோடு பாசத்தைப் பொழிந்து
உறவுகளின் உன்னத வாழ்வினில்
பெரும்பங்கு வகித்தீரே!- இன்று

எமையெல்லாம் விட்டுவிட்டு
எங்கு தான் சென்று விட்டீர்?
திங்களொன்று ஆனதையா
தினம் தவிக்கின்றோம் நாங்களிங்கே!
உம் ஆத்மாவின் சாந்தி வேண்டி
இறைபாதம் பணிகின்றோமே!!

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்திகேட்டு ஆறுதல் கூறி, அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டோருக்கும், உதவிகள் பலசெய்த உன்னத நெஞ்சங்களிற்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரது இல்லத்தில் இன்று (21.06.2006) புதன்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

460/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

*பிரிவால் துயருறும்:*
**குடும்பத்தினர்.**

*தகவல்:*
**கு.சத்தியசீலன்**
**(சகலன்).**

(சி.49757) (39-11-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP GERMANY 2006

# 18 ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி

## கோல் பொழிந்தது உக்ரைன் படுதோல்வி அடைந்தது சவூதி

உலகக் கோப்பை கால்பந்து 2ஆவது போட்டியில் சவூதி அரேபியா -உக்ரைன் அணிகள் மோதின. இதில் உக்ரைன் 4-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. கடைசி வரை போராடிய சவூதி அரேபிய அணி படு தோல்வியடைந்தது. நேற்றுமுன்தினம் 'எச்' பிரிவை சேர்ந்த சவூதி அரேபியா -உக்ரைன் அணிகள் மோதின.

துனிசியாவுடனான முதல் லீக் போட்டியை சவூதி அரேபியா சமநிலை செய்திருந்தது. உக்ரைன், ஸ்பெயினிடம் தோல்வி அடைந்திருந்தது. இக்கட்டான நிலையில் இரு அணிகளும் இரண்டாவது லீக் போட்டியை நேற்றுமுன்தினம் ஹாம்பேர்க்கில் எதிர்கொண்டன.

ஆட்டத்தின் 4 ஆவது நிமிடத்திலேயே உக்ரைனுக்கு நல்ல தொடக்கம் அமைந்துவிட்டது. உக்ரைன் வீரர் மேக்சிம் கலினிசென்கோ மூலை உதையை அடிக்க, அதை ஆன்ட்ரி ரசோல் கோலாக மாற்றினார். தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய உக்ரைன் அணிக்கு, 36 ஆவது நிமிடத்தில் செர்கி ரெபோவ் 100 அடி தூரத்திலிருந்து கோல் அடித்து முன்னிலை பெற்றுக் கொடுத்தார். முதல் பாதியில் உக்ரைன் 2-0 என்ற முன்னிலை பெற்றது. சவூதி அரேபிய அணி கோல் அடிக்க முயன்றும் முடியாமல் போனது.

இரண்டாவது பாதியில் எப்படியாவது கோல் அடித்து விட வேண்டும் எனச் சவூதிஅரேபியா முயன்றது. ஆனால் உக்ரைன் வீரர்களின் தடுப்பு ஆட்டத்தை மீறி கோல் அடிக்க முடியவில்லை. மீண்டும் தொடங்கியது உக்ரைனின் அதிரடி ஆட்டம். 46ஆவது நிமிடத்தில் உக்ரைனின் நட்சத்திர வீரர் செவ்சென்கோ, ஆட்டத்தின் மூன்றாவது கோல் அடித்து அசத்தினார். இவரைத் தொடர்ந்து கடைசி நேரத்தில் செவ்சென்கோ கொடுத்த பந்தில், கலினி சென்கோ ஒரு கோலை அடிக்க 4-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது உக்ரைன். சவூதி அரேபியா தரப்பில் எந்த ஒரு வீரரும் திறம்பட செயற்படவில்லை.



FIFA WORLD CUP GERMANY 2006

தொகுப்பு அதிரன்

## பெருமூச்சு விட்ட கொரியர்கள்!

லீப்ஜிக்கில் நடைபெற்ற பிரான்ஸுடனான ஆட்டத்தில் (1-1) தங்களது அணி மயிரிழையில் தப்பிப் பிழைத்தால் தென் கொரிய ரசிகர்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

அந்நாட்டு நேரப்படி அதிகாலை 4 மணிக்கு ஆட்டம் தொடங்கியுள்ளது. அந்த நேரத்தில் லட்சக்கணக்கானோர் சியோலிலும், மற்ற நகரங்களிலும் தெருக்களில் ஒன்றாகக் கூடி ஆட்டத்தை ரசித்துள்ளனர்.

சியோலில் மட்டும் 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் தெருக்களில் நின்று ஆட்டத்தை ரசித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

முதல் பாதியில் தென்கொரியா ஒரு கோல் வாங்கினாலும், 81ஆவது நிமிடத்தில் பார்க் ஜி-சுங் அடித்த கோல் தென்கொரியர்களின் வயிற்றில் பாலை வார்த்தது. தோல்வியைத் தவிர்த்ததன் மூலம் 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற வாய்ப்புள்ளதாகக் கொரியர்கள் நம்புகின்றனர்.

### இன்றைய ஆட்டங்கள்

பிரிவு 'டி' - போர்த்துக்கல் - மெக்ஸிக்கோ இரவு 7.30 மணி
பிரிவு 'டி' - ஈரான் - அங்கோலா இரவு 7.30 மணி
பிரிவு 'சி' - நெதர்லாந்து - ஆர்ஜென்ரீனா அதிகாலை 12.30 மணி
பிரிவு 'சி' - ஐவரிகோஸ்ட் - சேர்பியா அதிகாலை 12.30 மணி

## பிரான்ஸ் வீரர் ஜிடேன் விரக்தி




தென் கொரியாவுடன் 1-1என சமநிலை அடைந்தது துரதிஷ்டவசமானது என பிரான்ஸின் நட்சத்திர வீரர் ஜினெடின் ஜிடேன் கூறியுள்ளார். பிற்பாதியில் எமது ஆட்டம் தொய்வடைந்தது. தென் கொரியாவுக்கு எதிராகக் குறைந்தது இரண்டு கோல்களாவது போட்டிருக்க வேண்டும். ஆனால் நல்ல வாய்ப்பைத் தவறவிட்டுவிட்டோம். இதனால் 2ஆவது சுற்றுக்கு முன்னேற டோகாவை 2 கோல் வித்தியாசத்தில் வென்றாக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது என்றார் - ஜிடேன். டோகாவுடனான ஆட்டத்தில் நட்சத்திரவீரர் ஜிடேன் இடம் பெறமாட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## டோகாவைத் தோற்கடித்து இரண்டாம் சுற்றில் சுவிஸ்

உலகக் கோப்பை முதல் சுற்றில் தோல்வியடைந்த டோகா உலகக் கோப்பைத் தொடரின் இரண்டாவது சுற்றில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்தது.

'ஜி' பிரிவில் இடம்பெற்றுள்ள சுவிற்சர்லாந்து, டோகா அணிகள் இரண்டாவது லீக் போட்டியில் மோதின. பிரான்சுக்கு எதிரான முதல் லீக் போட்டியில் சுவிற்சர்லாந்து ஆட்டத்தை சமநிலை செய்திருந்தது. தென்கொரிய அணியுடனான முதல் போட்டியில் டோகா தோல்வி அடைந்திருந்தது. இந்நிலையில் இருஅணிகளும் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் நேற்றுமுன்தினம் டார்ட்மண்டில் களமிறங்கின.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் விட்டுக்கொடுக்காமல் போராடின. ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் டோகாவுக்கு முதல் வாய்ப்பு கிடைத்தது. மொகமத் அடித்த அந்த பந்தை சுவிற்சர்லாந்து கோல் காப்பாளர்



சுபேர்பியூக்லர் கையில் தஞ்சம் புகுந்தது. 10ஆவது நிமிடத்தில் டோகா வீரர் இமானுவேல் அட்பயோர், 'பெனால்டி' பகுதிக்குள் சுவிஸ் வீரர் ரிக்கோர்டோ கேபனசால் தடுக்கப்பட்டுக் கீழே விழுந்தார். ஆனால் நடுவர் பெனால்டி வாய்ப்புக் கொடுக்க மறுத்து விட்டார். இதனால் டோகா அணியினர் சோகமடைந்தனர்.

முதல் பாதியின் 16 ஆவது நிமிடத்தில் சுவிற்சர்லாந்து முன்னிலை பெற வாய்ப்புக் கிடைத்தது. மேக்னின் கிராஸ் கொடுத்த பந்தைப் பெற்றுக்கொண்ட அலெக்ஸ் பிரய் ஆட்டத்தின் முதல் கோலை அடித்தார். இதற்கு பதிலடி கொடுக்க நினைத்த டோகா வீரர்களின் முயற்சி பலன் அளிக்கவில்லை. ஆட்டத்தின் முதல் பாதிவரை இதே நிலை நீடித்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் அடிக்க கடுமையாகப் போராடின. சுவிற்சர்லாந்து வீரர் பர்னட்டா அபாரமாக ஆடினார். ஆட்டத்தின் 52 ஆவது நிமிடத்தில் பர்னட்டா கோல் கம்பத்தை நோக்கி அடித்த பந்தை பாய்ந்து வந்து தடுத்தார் டோகா அணி கோல் காப்பாளர் கோசி அகஸ்சா. இதே போல் 63ஆவது நிமிடத்தில் யாகின் அடித்த பந்தையும் தடுத்து நிறுத்தினார் அகஸ்சா. சுவிற்சர்லாந்தின் கோல் மழையை பெருமளவு தடுத்தவர் அகஸ்சா என்பது குறிப்பிடத்தக்கது.

ஆட்டத்தின் கடைசி நேரத்தில் சுவிற்சர்லாந்து வீரர் பர்னாட்டாவுக்கு கிடைத்தது அரிய வாய்ப்பு. 88ஆவது நிமிடத்தில் 17 மீற்றர் தூரத்திலிருந்து அவர் அடித்த பந்து கோல் காப்பாளர் அகஸ்சாவை மீறி கோல் கம்பத்துக்குள் விழுந்தது. இறுதியில் சுவிற்சர்லாந்து 2-0 என்ற கோல் கணக்கில் டோகாவை வீழ்த்தி வெற்றிபெற்றது.

முதன் முதலில் உலகக் கோப்பை கால்பந்து தொடரில் பங்கேற்ற டோகா, தொடர்ந்து இரண்டு லீக் போட்டிகளில் தோல்வி அடைந்ததால் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்தது.

## ஸ்பெயினிடம் தோற்றதால் வெளியேறியது துனிசியா



துனிசியாவுக்கு எதிரான லீக் போட்டியில் ஸ்பெயின் 3-1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ டோரஸ் 2 கோல்கள் அடித்து அணியை வெற்றி பெறச் செய்தார்.

நேற்றுமுன்தினம் ஸ்டட்கார்டில் நடந்த லீக் போட்டியில் 'எச்' பிரிவைச் சேர்ந்த ஸ்பெயின் - துனிசியா அணிகள் மோதின. துனிசியா - சவூதி அரேபியா இடையிலான முதல் போட்டி சமநிலையில் முடிந்ததால் வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது துனிசியா.

எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற துடிப்புடன் ஆடியது துனிசியா. அதற்கு ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத்தில் பலன் கிடைத்தது. துனிசியாவின் ஜியாத் 'பெனால்டி' பகுதிக்குள் கொடுத்த பந்தைப் பெற்றுக் கொண்ட ஜோஹர் மினாரி கோல் அடிக்க முயன்றார். முதல் முயற்சி கைநழுவ, இரண்டாவது முயற்சியில் துல்லியமாக அடித்து அசத்தினார். ஆட்டத்தின் முதல் பாதியில் துனிசியா 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

உக்ரைனுக்கு எதிரான முதல் போட்டியில் கலக்கிய ஸ்பெயினின் நட்சத்திர வீரர் டேவிட் வில்லா நேற்றுமுன்தினம் பெரும் ஏமாற்றம் அளித்தார். ஆட்டத்தின் 55ஆவது நிமி டத்தில் அவர் வெளியேற, அவருக்குப் பதிலாக மாற்று வீரராக ஜாக்யூன் களமிறங்கினார். ஆட்டத்தின் 71 ஆவது நிமிடத்தில் ரால் அபாரமாக ஆடி ஸ்பெயின் அணிக்காக முதல் கோலை அடித்தார். அடுத்து 5 நிமிடங்களில் பெர்னாண்டோ டோரஸ் இரண்டாவது கோல் அடிக்க ஸ்பெயின் முன்னிலை பெற்றது. ஆட்டத்தின் கடைசி நேரத்தில் பெனால்டி வாய்ப்பில் மற்றொரு கோல் அடித்து அசத்திய டோரஸ் ஸ்பெயின் வெற்றியை உறுதி செய்தார். இதன் மூலம் இறுதியில் ஸ்பெயின் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இப்போட்டியில் தோல்வி அடைந்ததால் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது துனிசியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவர சர்வதேச சமூகம் உடன் தலையிட வேண்டும்

## அடைக்கலநாதன் எம்.பி. கோருகிறார்

அப்பாவிப் பொதுமக்கள் மீதான அரச பயங்கரவாதம் உச்சக் கட்டத்துக்கு சென்றுள்ளது. இதனைத் தடுத்துநிறுத்த சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அ. அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கெப்பிட்டிக் கொலாவையில் பொது மக்கள் பயணித்த பஸ் வண்டி மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டமையைக் கண்டித்து வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்படி வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அனுராதபுரம் கெப்பிட்டிக்கொலாவையில் பொதுமக்கள் பயணித்த பேருந்து கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானதில் 63 பயணிகள் பலியானதும், அத்துடன் 79 பேர் காயமடைந்தனர் என்பதும் மிகவும் அதிர்ச்சிக்கும் கவலைக்குமுரிய விடயமாகும். அப்பாவிப் பொதுமக்கள் மக்களை இலக்குவைத்து நடாத்தி முடிக்கப்பட்ட மனிதாபிமானமற்ற ஈவிரக்கமற்ற இச்செயலையிட்டு எனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆயுத தாரிகள் யாராயிருந்தாலென்ன குழந்தைகள் பெண்கள் வயோதிபர் பயணித்த பேருந்தை இலக்கு வைத்து இத்தாக்குதலை நடத்தியது இரக்கமற்ற அரக்கச் செயலாகவே நான் கருதுகின்றேன். குழந்தையைக் கையிலேந்திக் கதறி அழும் தந்தை, குழந்தைகள், பெண்கள், வயோதிபர் ஆகியோரது உயிரற்ற உடலங்கள் வரிசைக்கிரமத்தில் அடுக்கி வைக்கப்பட்ட, ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்ட காட்சிகள் எந்தக் கல் மனதையும் கரைத்துவிடும்.

பேருந்தில் பயணித்து உயிரைப் பலி கொடுத்த அத்தனை பேரதும் ஆன்ம சாந்திக்காக வேண்டுவதுடன் இவர்களது பிரிவால் துயருறும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதே நேரத்தில் அரச பயங்கரவாதத் தால் எறிகணைத் தாக்குதல்களால் விமானத் தாக்குதல்களால் அப்பாவித் தமிழர்களின் உயிர் பறிக்கப்பட்டதும் காயமடைந்தோர் உற்றார், உறவினர், கதறித் துடித்ததுமான காட்சிகளும் மேற் சுட்டிக்காட்டப்பட்ட காட்சியை ஒத்த தாக இத்தருணத்தில் என் கண்முன் தோன்று வதை என்னால் தடுக்க முடியாதுள்ளது.

அண்மையில் இலங்கை இராணுவத் தளபதி தற்கொலைக் குண்டு தாக்குதலுக்கு ஆளாகியதன் பிற்பாடு இலங்கை விமானப் படை விமானங்கள், விடுதலைப் புலிகளை இலக்குவைத்து ரால்குழி, சம்பூர், மூதூர்ப் பகுதியில் தாக்குதலை நடத்தியபோது, விடுதலைப் புலிகளைத்தவிர்த்து, முஸ்லிம் மௌலவி உட்பட பொது மக்கள் சிலர் கொல்லப்பட்டனர். தற்போதைய கெப்பிட்டிக்கொலாவ பேருந்து கிளைமோர் தாக்குதலின் பிற்பாடும் முல்லைத்தீவு, திருகோணமலை, மூதூர், கிளிநொச்சி, வன்னிப்பகுதிகளை இலங்கை விமானப்படை விமானங்கள் கண்மூடித்தனமாகத் தாக்கும்போது அப்பகுதி அப்பாவிப் பொதுமக்களுக்கு உயிராபத்து உண்டு என்பதை இலங்கை அரசு சிந்திக்காமல் விட்டது ஏன் என்பது எனது கேள்வியாகும்.

ஒவ்வொரு குண்டுத்தாக்குதலின் பிற்பாடும் அரச படைகள் வெறிகொண்டு வடக்கு - கிழக்கு மாகாண அப்பாவிக் கிராம மக்களை ஆண், பெண் குழந்தைகள் வயோதிபர் என்று கூடப் பாராது அடித்து உதைப்பதும் கற்பழிப்பதும் கொலை செய்வதும் சர்வசாதாரணமான நிகழ்வாகி அரச பயங்கரவாதம் உச்சக்கட்டமாய் உள்ளதையிட்டு சர்வதேச சமூகமும் ஊடகங்களும் கவனம் செலுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (204)

## நாவற்குழியில் இன்று தேட்டம் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன்21

செயல்திறன் அரங்க இயக்கமும் நாவற்குழி தெற்கு மகளிர் குழுவும் இணைந்து நடத்தும் தேட்டம் கலை விளையாட்டுத் திடல் நிகழ்வு இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு கிராமத்தின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம் கலந்துகொள்வார். பெண்கள், சிறுவர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுக்கள், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

போர் நெருக்குவாரங்கள் சூழ்ந்துள்ள தற்போதைய நிலையில், பெண்கள், சிறுவர்களின் மனங்களை ஆசுவாசப்படுத்தும் உள சமூக மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த தேட்டம் கலை விளையாட்டுத்திடல் நிகழ்வு இப்பகுதிகளில் நிகழ்த்தப்பட்டுவருகின்றது. (ம)

## பதவியேற்பு நிகழ்வு

சாவகச்சேரி லயன்ஸ் கழக 27ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வும் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளன. கழகத் தலைவர் லயன் சி.சிவபால சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்டத்துணை ஆளுநர் லயன் ஆர்.இராகவன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.கழகத்தின் புதிய தலைவராக லயன் வ.சிறிபிரகாஸம், செயலாளராக லயன் எஸ்.நரேனும், பொருளாளராக து.ஸ்ரீசுடரோனும் பதவியேற்கவுள்ளனர். (204-117)

## கலைப்பீட புதுமுக மாணவர் விரிவுரை ஜூலை 3இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்திற்கு 2005 - 2006ஆம் கல்வியாண்டிற்கு அனுமதிபெற்ற புதுமுக மாணவர்களுக்கான கல்விச்செயற்பாடுகள் எதிர் வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

முதல் இரு வாரங்களும் வழிகாட்டல் கருத்தரங்குகள் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் நடத்தப்படும் என கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் தெரிவித்தார்.

அதேவேளை -

கலைப்பீடத்தின் சகல பிரிவுகளிற்கான முதல் அரையாண்டுக்கான கற்றல் செயற்பாடுகள் அடுத்தமாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி-190)

## கலந்துரையாடல்கள்

வட்டக்கச்சி,ஜூன்21

வட்டக்கச்சி பிரதேச வர்த்தக சங்கப் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்குவட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வர்த்தக சங்கத்தின் தலைவர் சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன. இதில் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர், பகுதிகளைச் சேர்ந்த சகல வணிக நிலைய உரிமையாளர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204-405)

* * *

வட்டக்கச்சி,ஜூன்21

துணுக்காய் வலய பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக் கிழமை காலை 9 மணிக்கு துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து பாடசாலை அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (204-405)

## பஸ்சேவை நேரமாற்றம்

தென்மராட்சி,ஜூன் 19

பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களில் வேலை நேரங்கள் மாற்றப்பட்டதையடுத்து வ.பி.போ. சபையின் சில பஸ் சேவைநேரங்களும் நேற்றுமுன்தினம் தொடக்கம் அரை மணித்தியாலம் முன்நகர்த்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து சரசாலை ஊடாக சாவகச்சேரிக்குச் செல்லும் பஸ் சேவை நேர மாற்றங்கள் வருமாறு பருத்தித்துறையிலிருந்து காலை 6.20, 9.25, பகல் 1.05, பிற்பகல் 4.00 ஆகிய நேரங்களிலும் சாவகச்சேரியிலிருந்து காலை 7.55, 10.40, பிற்பகல் 2.35, பிற்பகல் 5.40 ஆகிய நேரங்களிலும் பேருந்துகள் புறப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்21

அச்செழு வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வளர்மதி முன்பள்ளியின் பெற்றார் ஆசிரியர் சங்கத் தலைவர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் கலந்து கொள்வார்.

## வீடியோக்கடையில் நள்ளிரவு திருட்டு

வலி.தென்மேற்கு,ஜூன் 21

நள்ளிரவு வேளையில் பண்டத்தரிப்பு சந்திக்கு சமீபமாகவுள்ள வீடியோ கடையின் ஓட்டைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த வீடியோ கசட்டுகள், டெக் உட்பட சுமார் 65 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களையும், 20 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த 13ஆம் திகதி இரவு நடைபெற்ற இத்திருட்டுச் சம்பவம் பற்றி கடை உரிமையாளர் இளவாலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனை அடுத்து பொலீஸார் ஸ்தலத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டனர். (135)

## பதுளையில் சனியன்று 3 தமிழ் இளைஞர் கைது

ஹாலி - எல, ஜூன் 21

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினர் எனக் கூறப்படும் மூன்று தமிழ் இளைஞர்கள் கடந்த சனியன்று பதுளையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று இளைஞர்களும் பதுளை பொலீஸ் நிலையத்திற்கு முன்பாக சந்தேகத்திற்குரிய முறையில் நடமாடினர் எனக் கூறி பதுளை குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் இவர்களைக் கைதுசெய்துள்ளனர்.

- இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் பின் இவர்கள் நீதி மன்றில் ஆஜர்செய்யப்படவுள்ளனர் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (க)




ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
டிக்கட் தொடர் இல. 6676096 முதல் 6685904 வரை. சீட்டிழுப்பு இல. 246 திகதி 19-06-2006
வெற்றி எண்கள்
7 5 9 6 5 3 சுப்பர் எண் 02
ஜக்பொட் பரிசு ரு. 11,814,075/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 11,814,075/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 08 | 50,000/= | 400,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 85 | 5,000/= | 425,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 861 | 500/= | 430,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8548 | 50/= | 427,400/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 84752 | 10/= | 847,520/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 86 | 1,000/= | 86,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 859 | 100/= | 85,900/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8470 | 20/= | 169,400/= |
| | | மொத்தம் ரு. 3,916,720/= | |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,519,320/-

ரு. 75,325/- பெறுமதியான மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்றுவை | 6681539-9-51 |
| இரத்தினபுரி | 6679476-9-69 |
| காலி | 6678905-1-93 |
| மாத்தறை | 6677740-9-98 |
| கொழும்பு | 6681195-9-01 |
| திருகோணமலை | 6680241-9-29 |
| களுத்துறை | 6681001-3-85 |
| கம்பஹா | 6683867-3-47 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரு. 12,051,875/-
தொடர் இல. 7588613 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஜூன் 22 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.



தேவை
எமது கல்வி நிறுவனத்திற்கு கணனி ஆய்வுகூட உதவியாளர் (Computer Lap Helper) உடனடியாகத் தேவை. கணனி அறிவு உடையவராகவும் 18 - 25 வயதிற்கு இடைப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.25.06.2006 அன்று முற்பகல் 10 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேரில் வரவும்.
NEW MICRO COMPUTER SYSTEMS
Main Street,Chankanai,
Jaffna, Sri Lanka.



கண்ணீர் அஞ்சலி
எமது நிலைய உப தலைவரான திரு.தம்பிஐயா தேவராசா அவர்களின் தாய்
திருமதி சின்னம்மா தம்பிஐயா
18.06.2006 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
கோயில் வாசல், இணுவில். இணுவில் அறிவாலயம்.



A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே...!
உங்களுக்காக முதன்முறையாக யாழ் நகரில்
COMPUTERIZED ACCOUNTING
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். Only in 30 Hours Start on Saturday 24-06-2006 4.00 P.M
சர்வதேச ரீதியில் பிரசித்தி பெற்ற கணினி மென்பொருட்களை பயன்படுத்தி நிறுவனங்களின் கணக்கியல் நடவடிக்கைகளை கணினி மயப்படுத்த உங்களாலும் முடியும். 06 வாரங்களில் நீங்களும் ஓர் கணினியல் கணக்கியலாளராகுங்கள்.
QuickBooks Accountant 2006 MYOB Accounting Tally Simply Accounting
To Whom:
- School Leavers
- Students of Tecnical colleges & Advanced Technical Institutes(ATI).
- Students members of AAT, CMA, CIMA, Charted(SL) & ACCA.
- Under Graduates & Graduates of Universities.
- Employees of Private companies, Banks, Government Institutions.
- Those who search Jobs
- Those who are interesting in Accounting packages.

ஏன் நீங்கள் எங்களுடன் இணைந்துகொள்ள வேண்டும்......!
- முற்றுமுழுதாக செய்முறைப் பயிற்சியை கொண்டது.(No Theory Class)
- மென்பொருள் CD களும் அவற்றிற்குரிய வழிகாட்டி கையேடுகளும் இலவசமாக வழங்கப்படும்.
- பயிற்சிக்காலம் மிகக்குறுகியது.
- மிகக் குறைந்த கட்டணம்.
- வசதிக்கேற்ப பயிற்சி நேரத்தை ஒழுங்குசெய்ய முடியும்.
- பயிற்சி முடிவில் தகைமைச்சான்றிதழ் வழங்கப்படும்.



குறிப்பு:-
கணக்கியல் அறிவில்லாதவர்களும் இணைந்து பயிற்சி பெற முடியும். பயிற்சிகள் யாவும் Qualified & Experienced Lecturers மற்றும் Banking Professionals ஆல் நடாத்தப்படும்.
C.B Computer Academy
T.P No 021-4590291 Staion Road, Kondavil.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீகொடவில் கோர பஸ் விபத்து ஐவர் பலி; 40 பேர் படுகாயம்

கொழும்பு, ஜூன் 21

கொழும்பிலிருந்து இங்கிரிய நோக் கிச் சென்று கொண்டிந்த அரச போக்கு வரத்துச் சபை பஸ் ஒன்று மீகொட பொரு ளாதார நிலையத்துக்கு அருகில் பாதையை விட்டு விலகி குடியிருப்புப் பகுதிகளுக்குள் புகுந்து புரண்டதில் ஐவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 40 பேர் படுகாய மடைந்த நிலையில் கொழும்பு, பாதுக்கை, ஹோமாகம ஆகிய இடங்களிலுள்ள வைத் தியசாலைகளில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் இடம்பெற்றது.

ஆபத்தான நிலையில் ஹோமாகம வைத் தியசாலையில் சேர்க்கப்பட்ட 10 பேர் நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுள்ளனர்.

பஸ் சாரதிக்குக் காலொன்று முறி வடைந் துள்ளதாகவும், வேலை முடிந்து வீடு நோக் கிச் சென்று கொண்டிருந்தவர்களே பஸ்ஸில் அதிகமாக இருந்துள்ளனர் எனவும் தெரிவிக் கப்படுகிறது.

பாதுக்கை பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(க)

# கருணா குழுவின் உளவாளி மதவாச்சியில் சுட்டுக் கொலை

மதவாச்சி, ஜூன் 21

கருணா குழுவினரின் உளவாளியாகச் செயற்பட்டு வந்தவர் எனக் கருதப்படும் ஒருவர் நேற்று முன்தினம் மதவாச்சியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

தனது நண்பருடன் மோட்டார் சைக்கி ளில் சென்றுகொண்டிருந்த போதே மகாதி வுல்வெவ என்ற இடத்தில் மேற்படி நபர் துப் பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். இதில் இந்த நபரின் நண்பரும் காயமடைந்து மதவாச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரி யாத இரு நபர்கள் 9 எம்.எம். ரக 'பிஸ்டல்' ஒன்றின் மூலம் இந்தத் துப்பாக்கிப் பிர யோகத்தை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றனர் என மதவாச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவ இடத்திலிருந்து துப்பாக்கி ரவைகள் சிலவும் மீட்கப்பட் டுள்ளன.

மதவாச்சிப் பொலிஸார் இது தொடர் பான விசாரணைகளை நடத்தி வருகின் றனர்.

# சாலியவெவ காட்டில் நேற்று தேடுதல்!

புத்தளம், ஜூன் 21

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் குழு வொன்று ஊடுருவியிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து இராணுவத்தினரும், பொலீஸாரும் நேற்றுக் காலை புத்தளம் - சாலியவெவ காட்டுப் பகுதியில் பெரும் தேடு தல் நடவடிக்கைஒன்றை மேற்கொண்டனர்.

சாலியவெவ காட்டுக்குள் குளம் ஒன்றில் நீர் அள்ளுவதற்காகச் சென்ற ஒருவர் ஆயு தம் தாங்கிய சிலரால் அச்சுறுத்தப்பட்டார் எனப் பொலிஸாருக்கு நேற்றுக் காலை தக வல் கிடைத்தது.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் களே இவ்வாறு ஊடுருவியிருக்கக் கூடுமென்று சந்தேகம் எழுந்ததால் இராணுவத்தினர் மற் றும் பொலீஸார் மோப்ப நாய்களின் உதவி யுடன் சாலியவெவ காட்டுப் பகுதியில் தீவிர தேடுதல்களை நடத்தினர்.

ஆனாலும், சந்தேகத்துக்கிடமான எவரும் சாலியவெவ காட்டுப் பகுதியில் இருந்து கைது செய்யப்படவில்லை என புத்தளம் பொலி ஸார் தெரிவித்தனர்.

# அல்லைப்பிட்டி மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

## சமூகசேவை அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்21

அல்லைப்பிட்டியில் மீளக்குடியமந்த குடும்பங்களின் பாடசாலை செல்லும் மாண வர்களுக்கு இலவசச் சீருடை கற்றல் உபகர ணங்களை வழங்க சமூகசேவைகள் அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத் துள்ளார் என்று சமூக நலத்துறை அமைச்சு நேற்று விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மக்கள் சந்திப்பின்போது வருகை தந்திருந்த பெரும் பாலான மக்களின் பல்வேறு பிரச்சினைகளை ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ். - கிளிநொச்சி மாவட்டங்க ளுக்கான அபிவிருத்திக்குழுவின் தலைவ மான டக்ளஸ் தேவனந்தா தீர்த்துவைத்தார். இதன்போது உரிய அரச உயரதிகாரிகளும் அமைச்சினால் அழைக்கப்பட்டிந்தமை குறிப் பிடத்தக்காகும்.

இதன் பிரகாரம் பல பகுதிகளில் இருந்து கூட்டாகவும் தனியாகவும் வருகை தந்தி ருந்த மக்களின் காணி, வீட்டு வசதிகள், மல சல கூடம், குடிதண்ணீர், போக்குவரத்து, கல்வி , சுகாதாரம் போன்ற அடிப்படை வச திகள் மற்றும் தொழில் முயற்சிகள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட் டன.

இதன்போது தென்மராட்சி மறவன் புலோ மேற்கு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய திருப்பணிச் சபையினர் அமைச்சரைச் சந் தித்து முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் மின்சார சபையின் பிரதி முகாமையாளரு டன் தொடர்புகொண்ட அமைச்சர் மேற்படி தேவஸ்தானம் அமைந்துள்ள பகுதிக்கு உட னடியாக மின்சார இணைப்பை வழங்குவத ற்கு நடவடிக்கை எடுத்ததுடன், மண்பிட்டிப் பகுதி மீனவ மக்களது தொழில்துறை சார்ந்த இடையூறுகளை நீக்குவதற்கான நடவடிக் கைகளையும் பாதுகாப்புத் தரப்பின் உயர திகாரி ஒருவரை உடனடியாக யாழ். அலு வலகத்திற்கு வரவழைத்து அவருடன் கலந் துரையாடி மேற்கொண்டார்.

நாளாந்தம் நூற்றுக்கணக்கான மக்கள் தங்களது பலவேறு பிரச்சினைகளை அமைச்சர்அவர்களிடம் முன்வைத்து வரு வதால் அவற்றில் பெரும்பாலான பிரச்சி னைகளை உடனடியாகத் தீர்த்துவைத்துவ ரும் அமைச்சர் அவர்கள் விரைவில் யாழ். மாவட்ட அரச அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது - என்று அதில் உள்ளது.

# நேற்று நீர்கொழும்பில் குண்டுப் புரளி!

நீர்கொழும்பு, ஜூன் 21

குண்டுப் புரளி ஒன்றினால் நீர்கொழும்பு நகரத்தில் நேற்றுக் காலை பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நீர்கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றுக்குள் வைத்து, விடுதலைப், புலிகள் இயக்கத்தின் சந் தேக நபர் ஒருவர் சக்தி வாய்ந்த குண் டுடன் கைது செய் யப்பட்டார் என நீர்கொழும்பு நகரம் முழுவதும் செய்தியொன்று பரவியதையடுத்தே இந்தப் பதற்ற நிலை ஏற்பட்டது.

நீர்கொழும்பு நகரி லுள்ள அனைத் துப்பாடசாலைக ளுக் கும் நேற்று இடை நடுவில் பெற்றோர் கள் சென்று தமது பிள் ளைகளை வீடுக ளுக்கு அழைத்துச் செல்ல எத்தனித் தனர்.

எனினும், நீண்ட நேரக் குழப்பத்தின் பின்னர் மேற்படித் தகவல் பொய் என்று தெரியவ ந்தது.

தவறான தகவ லொன்றே பரவு கின்றது என்பதைப் பொலீஸார் உறு திப்படுத்தி யதையடுத்து இதுபற்றி அனைத் துப் பாட சாலைகளுக்கும், பொது இடங்க ளுக்கும் அறிவிக்கப்பட்டது. இத னைய டுத்து நகரில் இயல்பு நிலை திரும்பியது.

இவ்வாறான தகவல்களைப் பரப்பும் விஷமிகளைக் கைது செய்வதற்காக நீர் கொழும்புப் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## மின்சாரத்தை மீதப்படுத்த

# தொலைக்காட்சி நேரத்தை வெட்டும் யோசனை

கொழும்பு, ஜூன் 21

மின்பாவனையைக் குறைப்பதற்காக தொலைக்காட்சி நிலையங் களின் ஒளி பரப்பு நேரத்தைக் குறைக்க வேண்டுமென மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் ஜோன் செனவிரட்ன முன்வைத்த யோசனை யொன்றை ஆளுங்கட்சியின் நாடாளு மன்றக் குழு நிரா கரித்துவிட்டது.

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் ஜனாதிபதி தலை மையில் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் நடை பெற் றது. அப்போது இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு மற்றும் மின்பாவனையைக் கட்டுப்படுத்துவது பற்றி ஆராயப்பட்டது.

கூட்டத்தில் கருத்துவெளியிட்ட அமைச்சர் ஜோன் செனவிரட்ன, தொலைக்காட்சி நிலை யங்கள் ஒளிபரப்பை இரவு 10 மணியுடன் நிறுத்த அரசு உத்தரவிட்டு, அதனை முறையாக மேற்கொள்ளாதவர்களுக்கு 10 லட்சம் ரூபாவரையில் அபராதம் விதித்தால் மின் பாவனையைக் கட்டுப்படுத்தமுடியுமென கூறினார்.

ஆனால், ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனை வன்மையாக ஆட் சேபித்தனர்.

இது நடை முறைச் சாத்தியமற்ற தென் றும் இவ்வாறான செயற்பாடுகள் அரசு மீது தவறான அபிப் பிராயத்தை ஏற்ப டுத்துமென்றும் ஆளுங் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, மின்பாவனையைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக வேறு வழிகளைக் காணு மாறு மின்சக்தி அமைச் சருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டார். (05)


**A/L 2008**

கலை, வர்த்தக, கணித பிரி வுகள் ஆரம்பமாகிவிட்டன

- B.st.- Mr.பசில்
- Acc.- Mr.தவா
- Eco.- Mr.கஜிதரன்
- Eng.- Mr.ரமணன்
- ★ C/ma. Mr.ஜெயந்துரா
- ★ Phy.- Mr.கரிலன்
- ★ Chc.- Mr.ஜெயந்தன்

சாம்றொக் ஈச்சமோட்டை

**புதிய வெளியீடு**



யுனிவர்சிட்டி புகழ் ஜீவன், சோனியா அகர்வால், விவேக் நடித்த

திருட்டு பயலே

மனோகரா யாழ்ப்பாணம்

10.30, 2.30, 6.30 மட்டும்

**தவறிவிட்டது**

14.06.2006 அன்று ஓமந்தை – முகமாலைச் சோதனைச் சாவடி களுக்கு இடையில் நீலநிற Swiss Polo சூட்கேஸ் ஒன்று தவறி விட்டது.இதில் மணப்பெண்ணின் கூறையும் அடங்கியுள்ளதால் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.:0776062406, 0776062269

செ.சின்னராசா, நாச்சிமார் கோயில் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

காட்சி நேரம் : 10.30, 2.30

சத்தியராஜ் (மாறுபட்ட 9 வேடம்), சூசன், விவேக், அப்பாஸ் நடித்த

"வணக்கம் தலைவா"

(அ-49188)

**ராஜா** யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த

பட்டியல்

புதிய வெளியீடு

(அ-47139)

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

**NEW SCIENCE HALL**

கன்னாதிட்டி யாழ்நகர்.

2007 A/L DAY CLASS

★ கணித, உயிரியல் பிரிவு

★2006 A/L பரீட்சைக்கு தோற்றியவற்குரியது

★ எமது வழமையான ஆசிரியர் குழு.

ஆரம்பம்28.06.2006 WED. 7a.m

(51459)


# மரண அறிவித்தல்கள்

## மருசிலீன் வின்சன்



நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமா கவும் வசிப்பிடமாகவும் கொண்ட மருசிலீன் வின்சன் அவர்கள் நேற்று(20.06.2006) செவ் வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மருசிலீன் - பிரகா சம்மா தம்பதியரின் அன்பு மகனும் அமலசோதி யின் அன்புக் கணவரும் மறோன், றெல்மன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அல்பிரெட், டேவிற் (நோர்வே), நீற்றா(நோர்வே),றெஜினா, லெற்றிற்ரா (ஜேர்மனி), காலஞ்சென்ற வலன்ரைனின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(21.06.2006) புதன்கிழமை முற் பகல் 10 மணியளவில் இறுதி ஆராதனைக்காக குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் குள மங்கால் சேமக்காலையில் இடம்பெறும்.

இந்த அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீதிமன்ற வீதி, மல்லாகம்.* (51456)

தகவல்: மறோன்(மகன்).

## திருமதி திரேசா தவமணி மார்செலின்

*(இளைப்பாறிய ஆசிரியை- தவமணி ரீச்சர்- யா/ மயிலணி வித்தியாலயம்)*



நாக்கியம்புலம், சுன்னாகத்தைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசா தவமணி மார்செலின் அவர்கள் 18.06.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இம் மானுவேல் முத்துத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர் களான லூக்காஸ்-பிரகாசியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் லூக்காஸ் மார்செலின் (இளைப்பாறிய ஆசிரியர் - யா/ மயிலணி வித்தியாலயம்) அவர் களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜெயமணி ஜோசவ், தோமஸ் துரைராஜா, றோஸ்மாகிரட் அன்ரனிரட்ணம் ஆகியோரின்அன்புச் சகோதரியும் திருச்செல்வம், ஞானப்பிரகா சம் (லண்டன்), அன்னம்மா, ஞானரத்தினம்,பிலோமினா துரை ராஜா (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனியும் அன்ரன லூக் தவராஜா (கனடா), மேரிகாமல்ரதினி(பிரான்ஸ்), நொயிலின் மாலினி (நோர்வே), காலஞ்சென்றவர்களான யெஸ்லின் சுலோஜினி, யூட் பொன்ராஜா மற்றும் யூடிற்றா வதனி (பிரான்ஸ்), கிறிஸ்ரா ராகினி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும் ஜீவா (கனடா), ஜெறோம் தயா, கோபாலசிங்கம் (பிரான்ஸ்), றெபேட் கிளைவ் ஞானப்பிர காசம்(நோர்வே),சாள்ஸ்மோகன்(பிரான்ஸ்), றிச்சாட் நிரோஜா (இத்தாலி) ஆகியோரின் அருமை மாமியும் யூடி ஜோசவ்ராஜ் (கனடா), சுஜீவன், நர்மதா, சில்வன் (பிரான்ஸ்), மேரிடயானா, அருள்அன் ரனி, கொலின், பிரிடா(நோர்வே), பெப்பச்சுவா, மெல்வின் (பிரான்ஸ்), சுவாத்திகா, நிறோசிகா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(21.06.2006)புதன்கிழமை முற் பகல் 10 மணிக்கு சூராவத்தை புனித திரேசாள் ஆலயத்தில் திருப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஏழாலை கிழக்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாக்கியம்புலம், சுன்னாகம்.*
*தொ.பே.: 0779184382* (51457)

தகவல்: லூக்காஸ் மார்செலின் (கணவர்). பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவிலியன்கள் படுகொலை: சபையில் ஒத்திவைப்பு விவாதம்

கெப்பிட்டிக்கொல்லாவ, வங்காலை மற்றும் பேசாலை ஆகிய இடங்களில் பொது மக்கள் படுகொலைசெய்யப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் இடம்பெறவுள்ளது. இந்த விவாதம் முழுநாள் விவாதமாக இடம்பெறும்.

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற கை கலப்பைத் தொடர்ந்து சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இக்கூட்டத்தின்போதே இன்று ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டுவருவதென முடிவெடுக்கப்பட்டது.

ஒத்திவைப்புப் பிரேரணையின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பேசாலை மற்றும் வங்காலை போன்ற இடங்களில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நீர்கொழும்பில் நேற்றிரவு பதற்றம்

நீர்கொழும்பு, ஜூன் 21

பமுனுகம பகுதியில் கைதானவருக்கு உதவினார் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்றுக் காலை நீர்கொழும்பு மெல்க்கம் பகுதியில் வாழ்ந்த தமிழ் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இதனைதத் தொடர்ந்து நேற்று இரவு அவரது வீடு தீக்கிரையாக்கப்பட்டதுடன் அயலிலும் சில வீடுகள் இதனால் பாதிக்கப்பட்டன என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து நீர்கொழும்பு பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இதன்காரணமாக நேற்று இரவு நீர்கொழும்பில் பதற்றம் நிலைவியது எனத் தெரிவிக்கப்பட்டது.

இச் செய்தி அச்சுக்கும் போகும்வரை இப்பதற்ற நிலைகுறித்த மேலதிக தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. (க)

## புங்குடுதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவின் மாவட்ட இணைப்பாளர் சுவேந்திரராஜா நேற்று சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்தினார்.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து ஊர்காவற்றுறை நீதிவான் யாழ். வைத்தியசாலையில் மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் நாம் ஈடுபாட்டுடன் உள்ளோம், வடக்கு - கிழக்கில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு நூறு சதவீதமான பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கிறோம்" - என்றார்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்து வரும் மோதலால் அப்பாவிப் பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏராளமான தமிழர்கள் அகதிகளாக வந்து கொண்டிருப்பது தமிழக மக்களை மிகுந்த வேதனைக்குள்ளாக்கி இருக்கிறது.

இலங்கையில், அமைதி நிலவ இந்திய அரசு உரிய முயற்சிகளை உடனடியாகச் செய்யவேண்டும். - என்று கோரியுள்ளார் ஜெயலலிதா.

## இடைக்காட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

தமது வீட்டு முற்றத்தில் கதிரையில் அமர்ந்திருந்த இவரை மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டனர் என்று கூறப்பட்டது. தோளிலும், நெஞ்சுப் பகுதியிலும் இவருக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டன என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

படுகாயமடைந்த வயோதிபர் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் முழுநேரத் தொண்டர் என்று ஒருதகவல் தெரிவித்தது. (11)

## திருகோணமலையில் மக்கள் இடம்பெயர்வு

திருகோணமலை மாவட்டத்திலுள்ள காந்திநகர் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் சிங்களக் காடையர்களின் அச்சம் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து அன்புவழிபுரம், செல்வநாயகபுரம் போன்ற பகுதிகளுக்குச் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காந்திநகர் கிராமம் திருகோணமலை - அநுராதபுரம் சந்திக்கு மிக அருகாமையில் இருப்பதனால் இங்கு அநுராதபுரம் பகுதிகளைச் சேர்ந்த சிங்களக் காடையர்களின் கெடுபிடிகளும், அச்சுறுத்தல்களும் இடம்பெறுகின்றன எனவும் இணையத்தளத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

## படையினருக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடை ந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என இராணுவத் தலைமையக உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத் தலைமையகத்திலிருந்து சுமா 40 கிலோமீற்றர் தூரம் வரை இத்தகைய பஸ் சேவை இராணுவச் சிப்பாய்களுக்காக விடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து பனாகொடை, களுத்துறை, ஹொரண, அவிசாவளை, திவுலுப்பிட்டிய, மினுவாங்கொடை ஆகிய பகுதிகளுக்கு இந்த பஸ் சேவை நடத்தப்பட்டு வந்தது. நாள்தோறும் இராணுவ அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் ஆயிரம் பேர் வரை இந்தச் சேவையைப் பயன்படுத்தி வந்தனர் எனவும் தெரிய வருகிறது.

இந்த பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டமை குறித்து சிப்பாய்கள் மற்றும் அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

பஸ் சேவையை இழந்த அனைத்துச் சிப்பாய்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அரச பஸ் மற்றும் ரயில் சேவைகளில் பயணிப்பதற்கான பருவகாலச் சீட்டுகள் வழங்கப்பட்டிருப்பதா கவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## மன்மோகன் சிங்கின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோகன் சிங்குடனும் தொலைபேசியில் பேசி னார்.

இந்த உரையாடலின் போது, இந்திய அர சின் விசேட பிரதிநிதியொருவரை தமிழக முதல்வருடன் எடுக்க வேண்டிய உகந்த வழிமுறைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு இந்திய அரசின் விசேட பிரதி நிதி ஒருவரை அனுப்பி வைக்கிறேன் என்று பிரதமர் முதல் வரிடம் தெரிவித்திருக்கிறார்.

"இலங்கைப் பிரச்சினை தொடர்பாக தி.மு. கழகம் மற்றும் தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்களைப் படித்துப் பார்த்தேன். இலங்கைப் பிரச்சினை பற்றி உங்களுடன் விவரங்களைக் கலந்து பேசுவதற்காக, டெல்லியிலிருந்து ஒரு பிரதிநிதியை அனுப்பி வைக்கிறேன். தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள விடயங்களைப் பற்றி உரிய முயற்சிகளை மேற்கொண்டு அமைதியான சூழ்நிலை உருவாக ஆவன செய்வோம்" என்று பிரதமர் மன்மோகன் சிங் தன்னிடம் தெரிவித்ததாக முதல்வர் கருணாநிதி குறிப்பிட்டார்.

## தமிழ்க் கூட்டமைப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் விமல் வீரவன்ஸ தனது உரையில் கேட்டுக்கொண்டார். இதற்கமைய சபையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

இந்த அஞ்சலி நிகழ்வின் பின்னர் எழுந்து நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கெப்பிட்டிக் கொல்லாவவில் இடம்பெற்றதை விட குரூரமான கொலைகள் மன்னாரிலும், ஏனைய இடங்களிலும் இடம்பெற்றன எனவும், இவற்றில் கொல்லப்பட்ட மக்களுக்காகவும் நாடாளுமன்றத்தில அஞ்சலி செலுத்தப்படவேண்டும் என்றும் ஒருசேர குரல் எழுப்பினர்.

இதனையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சபை நடுவில் நடந்து வந்து சபாநாயகரிடம் நீதி கேட்டுக் கோஷமிட்டனர். அப்போது ஆளுங்கட்சியிலிருந்து வந்த பிரதியமைச்சர்களான ரோஹித்த அபேகுணவர்த்தன, மஹிந்த அமரவீர உட்பட்ட பலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். வாய்த்தர்க்கம் முற்றியதால் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. தமிழ் எம். பிக்களுக்கு ஆதரவு தெரிவித்து சபையின் நடுவில் வந்த ஐ.தே.கட்சி எம்.பி.யான மகேஸ் வரன் மீதும் தாக்குதல் நடத்துவதற்கு ஜே.வி.பி. உறுப்பினர்கள் சிலர் முயன்றனர்.

இதனால், சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. புத்தகங்களும், காகிதாதிகளும் சபையில் பறந்தன. ஆத்திர மிகுதியில் மகேஸ் வரன் எம்.பி. கையிலிருந்த புத்தகம் ஒன்றை வீசியதில் எதிர்க்கட்சியின் முன்வரிசை ஆசனத்திலிருந்த சில கண்ணாடிக் குவளைகள் சிதறின. நிலைமை மோசமடைவதைத் தடுப்பதற்காக சபாநாயகர் காலை 10.30 மணிக்கு சபையை 5 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

இதன் பின்னர் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. இதன்போதும் நீண்ட வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றதால் சபை அலுவல்கள் 15 நிமிடங்களின் பின்னரே ஆரம்பமாகின.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் தமிழ்மக்களுக்கெதிரான சம்பவங்கள் குறித்து விவாதிக்க சபையில் இடமளிப்பதெனக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர் மானிக்கப் பட்டதால், சபை மீண்டும் கூடிய பின்னர் அமைதி நிலவியது.

## கஜேந்திரன் எம்.பியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'உதயன்'இற்குத் தெரிவித்தார்.

நேற்றைய சம்பவம் குறித்து கஜேந்திரன் எம்.பி. கூறியதாவது:-

"கெப்பிட்டிக்கொல்லாவையில் சிங்கள மக்கள் கொல்லப்பட்டமைக்கு ஜே.வி.பியினர், சபையில் மௌன அஞ்சலி செலுத்தினர். நாம் அதைக் குழப்பவில்லை. சிங்களவர்கள் கொல்லப்படுகின்றபோது மட்டும் இவ்வாறு செய்கிறீர்கள். தமிழ் மக்கள் பேசாலை, வங்காலை ஆகிய இடங்களில் அரச படையினரால் கொல்லப்பட்டனர். இதனை ஏன் கண்டுகொள்ளாமல் இருக்கிறீர்கள் எனக் கூறி சபையில் நாம் ஆர்ப்பாட்டம் செய்தோம்.

அப்போது அரச தரப்பினரும், ஜே.வி.பியினரும் பாய்ந்து வந்து என்னைத் தாக்கினர். என்னோடு சேர்த்து எமது ஏனைய எம்.பிக்களை யும் தாக்கினர்.

ஜே.வி.பியினர் மிகவும் ஆக்ரோசமாகக் காணப்பட்டனர். என்றுமில்லாத ஒரு வெறி அவர்கள் முகத் தில் காணப்பட்டது.

நாட்டை வழிநடத்த வேண்டிய எம்.பிக்களும், அமைச்சர்களும் இவ்வாறு வெறித்தனமாகச் செயற்பட்டால் அரச படையினர் வெறிகொண்டு செயற்பட மாட்டார்கள் என்று சொல்ல முடியாது."

- இப்படி அவர் கூறினார். (07)

## அல்லைப்பிட்டி படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பதிவுசெய்துள்ளோம். ஏனைய சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்ய முடியவில்லை. சம்பவத்தை நேரில் கண்டவர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்ய முடியவில்லை.

இதுவரை பதிவுசெய்த சாட்சிகளின் அடிப்படையில் கொலையுடன் தொடர்புபட்ட எவரையும் அடையாளம் காணமுடியவில்லை - என்று அதில் தெரிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம். றெமீடியஸ், ☐ சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தொட ☐ாகத் தெளிவான சாட்சியங்கள் உள்ளன. ஆகவே, குற்றம் புரிந்தவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் என்று கோரினார்.

இதனையடுத்து நீதிவான் வழங்கிய கட்டளையில்

இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை நீதிமன்றம் ஏற்கமுடியாதுள்ளது. சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சியங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஒழுங்காக விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என்றே கருதவேண்டியுள்ளது.

சட்டத்துறையின் உயர்பீடமான சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரைகளைப் பெற்று சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஏற்பாடுசெய்யவேண்டும் - என்று நீதிவான் தெரிவித்து வழக்கை ஒத்திவைத்தார்.


விமானப் பயணச் சீட்டு

★ முன்கூட்டிய பதிவுகளுக்கு சலுகைக் கட்டணம்

★ யாழ்.கொழும்பு துரித தபால் மற்றும் ஆவண சேவை




இல.32, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3916, 0777 517019, 0777 801038

நாளை விரிவுரைகள் ஆரம்பம்.
A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கணினி விரிவுரைகள் நாளை ஆரம்பம்.
Batch I 23-06-2006
Batch II 01-07-2006
மேலதிக விபரங்களுக்கு நேரில்.
C.B Computer Academy
T.P No 021-4590291 Station Road, Kondavil.

Diploma in Auto CAD
(With Manual Drawing)
பல்கலைக்கழக, திறந்த பல்கலைக்கழக, தொழில் நுட்பக்கல்லூரி,
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கானது
MCS
324, Palaly Road, Jaffna.

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...




யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email: jaffna@expoavi.com, reservations@expoavi.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.06.2006இல் வெளியிடப்பெற்றது.